வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 30.08.2023 புதன்கிழமை இதழ் : 263 பக்கங்கள் : 16




# ராஜபக்ஷர்களுக்காகவே இன்றும் நாம் நிற்கிறோம்

## பிரசன்ன ரணதுங்க வெளிப்படைக் கருத்து



**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**எனது வெற்றிக்காக அல்ல பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காகவே தேர்தலில் நின்றேன் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

வயதாகிவிட்டதாக கூறி பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டவர்களில் சிலர் எதிர்க்கட்சியில் இணைந்து ராஜபக்ஷக்களை விமர்சித்தாலும் தாம் இன்றும் ராஜபக்ஷக்களுக்காகவே நிற்பதாக அமைச்சர் கூறினார்.

தம்மை பற்றி யார் என்ன சொன்னாலும் கம்பஹா மக்களுக்கு தெரியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


பொதுஜன பெரமுன கிராம மட்டத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களின் பலத்தில் இருந்து உருவாக்கப்பட்டது.

கட்சித் தலைவர்கள் ஒன்று கூடி, கட்சியை உருவாக்கி, கிராம அளவில் உறுப்பினர்களைச் சேர்க்கும் கட்சியல்ல இது. பொதுஜன பெரமுன ஒரு கிராமத்திலிருந்து பத்து உறுப்பினர்களை சேர்த்து, அந்த பத்து பேரை இன்னும் பத்து பேரை சேர்த்துக் கொள்ளச் சொல்லி, கிளைகளை உருவாக்கி வளர்க்கப்பட்டது.

இப்போது யார் கதையளந்தாலும் அன்று 2015 இல் ஏற்பாடு செய்யப்பட்ட நுகேகொடை மேடையில் ஏறுவதற்கு யாரும் இருக்கவில்லை. மகிந்த மாகாண முதலமைச்சர்களை விட்டு வெளியேறியபோது நான் மட்டுமே முதலமைச்சராக மேடையில் நின்றிருந்தேன்.

அந்த பலத்தை எனக்கு மேல் மாகாண சபை 11

# அரசின் ஜனநாயக விரோத செயல்களை ஐ. நா. பிரதிநிதியிடம் பட்டியலிட்டார் அநுர



கொழும்பு, ஓக. 30

தேர்தலை நடத்துவதற்கு கட்டளையை பிறப்பித்த நீதிபதிகள் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டனரெனவும் மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்குட்படுத்தி அரசாங்கம் ஜனநாயக விரோதபோக்கை முன்னெடுப்பதாகவும் தேசிய 11

# வைத்தியசாலைக்குள் போதைப்பொருள் மறைத்து வைத்திருந்த பெண் சிக்கினார்!

கொழும்பு, ஓக. 30

கொழும்பு கிழக்கு வைத்தியசாலையில் (முல்லேரியா வைத்தியசாலை) மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அங்கு பணிபுரியும் பணிப்பெண் ஒருவரின் லொக்கரில் இருந்து ஐந்து ஐஸ் போதைப் பொருள் பொதிகளும் அவற்றை பொதி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வைத்தியசாலையின் பணிப்பாளர் கண்டெடுத்த போதைப் பொருளை ‘சீல்’ வைத்து முல்லேரியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். 11

# சுப்பர் நீல நிலவு இன்று வானில்!

கொழும்பு, ஓக. 30

முழுநிலவு இன்றைய தினம் சுப்பர் மூன் மற்றும் நீல நிலவாக இருக்கும் என்று பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நிலவு அந்த சுற்றுப் பாதையில் பூமிக்கு மிக அருகில் இருக்கும்போது வழக்கத்தை விட 14 வீதம் பெரியதாகவும் 30 வீதம் பிரகாசமாகவும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சந்திரன் பூமிக்கு மிக அருகில் இருக்கும்நிலை சுப்பர் மூன் என்று அழைக்கப்படுகின்றது. நாளை காலை 7.05 மணி வரை சந்திரன் பூமிக்கு மிக அருகில் 3 இலட்சத்து 57 ஆயிரத்து 344 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும். 2025 நவம்பர் வரை அது பூமிக்கு நெருக்கமாக வராது.

சந்திரனின் நீள்வட்ட சுற்றுப் பாதை காரணமாக முழுமதி நாட்களில் நிலவின் அளவும் 11

# ரங்காவின் மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஓக. 30

தனது வழக்கை விசாரிக்கும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பக்கச்சார்பாக செயல்பட்டதால், வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீரங்கா தனது சட்டத்தரணிகள் ஊடாக சமர்ப்பித்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் 11

# குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டிக் கொள்ளையடித்தது கும்பல்!

## மாகியப்பிட்டியில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை வீடுடைத்து உட்புகுந்து குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து 11 பவுண் நகை, 3 கைபேசிகள், 2 இலட்சம் ரூபாய் பணம், ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றை கொள்ளையடிக்கப்பட்டன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் கணவன், மனைவி, இரு சிறுபிள்ளைகள் இருந்த நிலையில் வீட்டின் கதவை உடைத்து முகமூடி அணிந்து உட்புகுந்து பிறந்து நான்கு மாதமேயான குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து வங்கி புத்தகங்கள், 3 பெறுமதியான கைபேசிகள், 11 பவுண் நகைகள், இரண்டு 11

# ராஜகுமாரியின் மரணம் பொலிஸ் அலுவலர் கைது!

கொழும்பு, ஓக. 30

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் உயிரிழந்த வீட்டுப் பணிப்பெண் ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை செப்ரெம்பர் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க 11

# நடுவீதியில் எரிந்தது பட்டா!



வடமராட்சி, ஓக. 30

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப்பகுதியில், பட்டா வாகனம் தீப்பிடித்ததில் எரிந்து நாசமாகியுள்ளது.

மின் கசிவால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் என கருதப்படுகிறது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பொருட்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ - 02)

# சீனக் கப்பல் இலங்கை வர அனுமதி வழங்கவேயில்லை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 30

ஷி யான் சிக்ஸ் சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை மேலும் ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

குறித்த கப்பல் இலங்கைக்கு வரும் திகதிகள் தொடர்பில் எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், வெளிவிவகார அமைச்சு மற்றும் 11

# இலங்கையில் பல கோடி ரூபாயை முதலிட தயாராகும் தென்கொரியா

கொழும்பு, ஓக. 30

தென் கொரியாவின் முன்னணி வர்த்தகர்களில் ஒருவரான கங் இலங்கையில் கடற்றொழில் துறையில் முதலீடு செய்வது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து நேற்று கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் இலங்கையில் மீன்களுக்கான உணவு, கடலுணவு உற்பத்தி தொழிற்சாலை மற்றும் மீன்பிடி படகு தொழிற்சாலை ஆகிய துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் ஒலுவில் கடற்றொழில் துறைமுக வளாகத்தில் இத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க விரும்புவதா 11

# இப்படியும் நடக்கிறது

பேச்சாளர்கள் பல வகைப் பட்டவர்கள். சிறந்த பேச்சாளர் என்று பெயர் எடுக்கவேண்டு மானால், பேசிக்கொண்டிருக் கின்றபோது, கேட்டுக் கொண்டி ருப்பவர்கள் தங்களை அறியா மலே கைகளைத் தட்டவேண்டும்.

ஒரு சிறந்த பேச்சாளன் என்பதை அடையாளம் காண்பதற்கு அவர் பேசிக் கொண்டிருக்கின்றபோது விழுகின்ற கைதட்டுக்களில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

ஆனால், அவர் கைதட்டுக் காகவே சில விடயங்களை வலிந்து பேசுகிறார் என்பதை அறிந்தால் சிலவேளைகளில் சினம் ஏற்பட்டுவிடும்.

அண்மையில், தமிழகத்திலி ருந்து இரண்டு பேச்சாளர்கள் வந்து யாழ்ப்பாணத்தில் பட்டிமன்றம் ஒன்றில் கலந்துகொண்டனர். உள்ளூர் பிரபலங்களுடன் அவர்கள் இணைந்து பட்டிமன்றம் நடத்தியது மகிழ்ச்சிக்கு உரியதுதான்.

அப்போது ஒரு தமிழக பேச்சாளர், யாழ்ப்பாணத்தின் தமிழையும் இங்கிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தாம் வாழும் நாடுகளில் தமிழை வளர்த்து வருவதையும் புகழ்ந்து பேசியபோது மண்டபம் அதிர்ந்தது கைதட்டுக்களால்.

இதே பேச்சாளர் முன்னர் ஒரு தடவை புலம்பெயர் நாடு ஒன்றுக்கு சென்றிருந்தபோதும் இதேபோன்ற கைதட்டுக்க ளுடன் அந்த விடயத்தை பகிர்ந்துகொண்டார்.

அவர் பாராட்டியது மகிழ்ச் சிக்குரியதுதான் என்றாலும், அதனை யாழ்ப்பாணத்திலும் புலம்பெயர் மண்ணிலும்தான் சொல்லவேண்டுமா? அவர் தமிழகத்தில் அனேகமாக தினம் ஒரு பட்டிமன்றத்தில் பேசுபவர். அங்கு அல்லவா யாழ்ப்பா ணத்தின் தமிழ் பற்றியும் புலம்பெயர் தமிழர்கள் தமிழ் வளர்ப்பது பற்றியும் பேசவேண் டும் என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

நான் பேச்சாளர்கள் பற்றி இன்று எழுதவேண்டும் என்று நினைத்ததும் இது ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடிய வில்லை. அதனால் எழுதவேண் டியதாகிவிட்டது. ஆனால், இன்று இந்தப் பத்தியில் எழுத வந்தது மற்றுமொரு பேச்சா ளரின் பேச்சு பற்றியது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தமிழர் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களுடைய தொண்ணூற்றி ஆறாவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு அவரது நினைவுப் பேருரை நிகழ்த்தியவரின் பேச்சை கேட்கும் சந்தர்ப்பம் இந்த ஊர்க்குருவிக்கும் கிடைத்தது.

இந்திரா காலத்திலிருந்து அமிர்தலிங்கம் அவர்களுக்கு இந்தியத் தலைவர்கள் மத்தியில் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஓர் இந்திய தேசிய விழாவில் அன்னை இந்திரா காந்தி, மேடையில் முன்வரி சையில் அமிர்தலிங்கத்தை அமரவைத்த காட்சியைக் கண்ட ஈழத்தமிழர்கள் அனைவரும் பெருமையடைந்தது ஒரு காலம். இந்தச் சம்பவத்தை அன்று விழாவில் பேசிய ஆயர் ஜெபநேசன் நினைவுகூர்ந்தார்.

தந்தை செல்வாவுக்குக்கூட தமிழகத்தை தாண்டி வடக்கு இந்தியாவில் தலைவர்களிடையே அறிமுகம் இருக்கவில்லை. ஆனால், அமிர்தலிங்கத்துக்கு அப்படியல்ல. அதனால்தான் அவர் இந்தியாவின் உதவியுடன் ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஏதேனும் ஒரு தீர்வைப் பெற்றுவிடலாம் என்று நம்பினார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்காக அவரும் ஆயுத இயக்கங்களும் கடுமையாக உழைத்தன. அந்த ஒப்பந்தத்தில் இந்தியா தனது நலனை மாத்திரமே முன்னிறுத் தியது என்று விடுதலைப் புலிகள் தரப்பில் குற்றம்சாட்டப்பட் டாலும், தமிழ் மக்களின் ஏழு தசாப்தகால போராட்டத்திற்கு இன்று கிடைத்திருக்கும் சிறிய ஆறுதல் என்றால் அது இந்த ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த மாகாண சபைகள்தான்.

அதைவிட அந்த ஒப்பந்தத் தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயம்: இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஒரு வரலாற்று நிகழ்வுதான்.

இந்த ஒப்பந்தம் ஏற்படவும் அதன்மூலம் ஒரு சிறிய ஆறுதலாவது ஏற்படுவதற்கு அமிர்தலிங்கம் - சிவசிதம்பரம் போன்ற தமிழர் மிதவாத தலைவர்களின் கடுமையான முயற்சியும் ஆயுத இயக்கங்களின் போராட்டமும்தான் காரணம் என்றுதான் நமக்கெல்லாம் தெரியும்.

ஆனால், அன்றைய அமிர்த லிங்கம் நினைவு வைபவத்தில் நினைவுரையாற்றிய எந்திரி விக்கினேஸ்வரன் அந்த ஒப்பந்தம் செய்யப்படுவதற்காக தான் செய்த 'தியாகங்களை' பட்டியலிட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தபோது அதிர்ச்சியாக இருந்தது. இந்த ஒப்பந்தத்திற்காக தான் செய்ததாக அவர் கூறிக்கொண் டிருந்த கதையை கேட்டபோது, இந்த ஊர்க்குருவிக்கு மட்டுமல்ல, அங்கிருந்த அனைவருக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தி ருக்கும்.

இந்தச் சம்பவத்தை ஒரு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த போராளி ஒருவரோடு பகிர்ந்துகொண்டபோது அவர் சொன்னார்,

'நானும் ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தி இயக்கத்தின் எல்லா வெற்றிகளுக்கும் நான்தான் காரணமானவன். நான் இயக்கத்திலிருந்து வெளியேறி புலம்பெயர்ந்ததால் தான் இயக்கம் தோல்வியடைய வேண்டிவந்தது' என்று சொல்லப் போகின்றேன் என்றார் நகைச்சுவையாக.!

**- ஊர்க்குருவி.**

# யாழ். முயற்சியாளர் கண்காட்சி ஆரம்பம்







யாழ்ப்பாணம், ஓக. 30

யாழில் "யாழ் முயற்சியாளர் - 2023" என்ற விற்பனைக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது.

யாழ் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட் டுள்ள இக்கண்காட்சி நேற்றும் இன்றும் யாழ்ப் பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற் கும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் விதமாகவே இக்கண்காட்சி முன் னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபால சுந்தரன் பிரதம விருந்தினராக கலந்துகொண் டார்.

அத்துடன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சிறிமோகனன், நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் கமலகுமாரி கருணாநிதி, தொழிற் துறை திணைக்களத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் உள்ளிட்ட பலரும் இக்கண்காட்சியில் கலந்துகொண்டனர்.

# 'ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு மானிப்பாயில்





யாழ்ப்பாணம், ஓக. 30

சார்க் ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியில் "ஆரோக்கிய மான எதிர்காலத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு நடைபெற் றுள்ளது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளர்களாக, மருத்துவர் கே. உதயசீலன், யாழ்.பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர்.மஏ.கஜிநந்தன் ஆகி யோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங் கினர்.

நிகழ்வு, முன்னதாக கல்லூரி முதல்வர் திருமதி சூரியராசா தொடக்க உரை நிகழ்த்தினார்.

வளவாளர்கள் கருத்துரைக்கும்போது, தற்போதைய சூழலில் இளவயதில் இருக்கும் மாணவிகளாகிய நீங்கள், உடனடியான கனதி யான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவேண் டும் என்று வலியுறுத்தினர். அதேவேளை சமூ கத்தில் தற்போது நிகழ்கின்ற நெறி தவறிய போக் குத் தொடர்பிலும் விழிப்பூட்டல் கருத்துக்களை முன்வைத்தனர்.

கருத்தரங்கிற்கான ஒருங்கிணைப்பினை புதுமை படைப்பகம் மேற்கொண்டிருந்தது. நிகழ்வு புதுமை படைப்பக இயக்குநர் ஊடகவி யலாளர் இளங்கீரன் தலைமையில் நடைபெற் றது.

நிகழ்வில் சார்க் ஊடக மன்றத்தின் இலங் கைப் பிரதிநிதிகள் சார்பாக ஊடகவியலாளர் கள் லியோ தர்ஷன், எம்.நியூட்டன், மனோ சித்திரா ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

(அ)

# இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே மிக விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

கொழும்பு, ஓக. 30

இலங்கை மின்சார சபைக்கும் ஜப்பான் மின்சார தகவல் நிலையத்திற்கும் இடையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை 2018 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் மின்சார தகவல் மையத்துடன் ஒத்துழைத்து வருகிறது, மேலும் 2019 இல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட் டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சட்டமா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அவ தானிப்புகளுக்கு அமைய, அதற்கான உத்தேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மாவா போதையுடன் மாணவன் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 30

தீவகப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மாவா போதை பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற் றிய நிலையில் மாவா போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடு பட்டு வந்துள்ளாரென ஊர் காவற்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில் குறித்த மாண வனை கைது செய்த ஊர்காவற் துறைப் பொலிஸார் நீதிமன்றத் தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
30.08.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 13
“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள்

இறுதி யுத்தத்தின் போதும் - அதன் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட நமது மக்களுக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விக்கான பதிலை தேடும் முயற்சிகளுக்கு இன்றுவரையில் பதில் கிடைக்கவில்லை. இனியும் கிடைக்குமா - என்னும் சந்தேகத்துடன்தான், நாட்கள் நகர்கின்றன. கடந்த பதினான்கு வருடகாலத்தின் தமிழர் தோல்வியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரமும் ஒன்று. இதிலுள்ள அடிப்படையான பிரச்னை ஓர் அரசாங்கம் பொறுப்புடன் பதிலளிக்கத் தவறினால், அடுத்து என்ன செய்வது - யார் நீதியை பெற்றுத் தருவார்? இந்தக் கேள்விகளுக்கான பதிலாகவே மேற்குலக நாடுகள் உற்றுநோக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக நீதி கிடைக்குமென்று பாதிக்கப்பட்ட மக்கள் கருதினர். இப்போதும் அவ்வாறான நம்பிக்கையுடன்தான் - அமெரிக்க கொடியுடனும் ஐரோப்பிய ஒன்றிய கொடியுடனும் வீதிகளில் நிற்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையில் தவறில்லை. பாதிக்கப்பட்ட மக்களை தனது பிரஜையாக ஒரு நாடு கருதாதபோது அவர்கள் வெளியாருக்காகத்தான் காத்திருப்பர். ஆனால், அந்த வெளியாரின் எல்லைக்கோடு என்னவென்பதுதான் கேள்வி.

பொறுப்புடன் எழுதுவதென்றால், தற்போதுள்ள சர்வதேச கட்டமைப்புகள் நீதியை பெற்றுத் தரும் வல்லமையுடன் இருக்கின்றனவா என்னும் கேள்வியையே நாம் முன்வைக்க வேண்டியிருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் தென்னிலங்கையில் அதிகாரத்தில் இருப்பவர்கள் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் பொறுப்புடனும் கடந்தகாலம் தொடர்பிலான குற்றவுணர்வுடன் செயல்பட்டால் மட்டுமே, சில விடயங்களில் முன்னேற்றத்தை காண முடியும்.

இல்லாவிட்டால், இலங்கையின் ஆட்சியாளர்களை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தும் வகையிலான, கடுமையான தீர்மானங்களை பலம் பொருந்திய நாடுகளான இந்தியாவும் அமெரிக்காவும் மேற்கொள்ள வேண்டும். ஆனால், அதற்கான சூழல் சிறிதும் இல்லை. கடந்த பதினான்கு வருடங்களில் இந்த நிலைமையை நாம் கண்டிருக்கின்றோம். இவ்வாறானதொரு நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிக்காக இன்னும் எத்தனை வருடங்கள் காத்திருப்பது? சில நாடுகளில் இடம்பெற்ற படுகொலைகளின் வரலாறு ஒரு நூற்றாண்டை கடந்துவிட்டது. ஆனால், நீதி? ஒரு நூற்றாண்டு கடந்துவிட்ட பின்னரும் காண முடியாத அந்த நீதி நமது விடயத்தில் எப்போது சாத்தியப்படும்?

உலகம் மேலும்மேலும் முகாம்களாகி வருகின்ற சூழலில்தான், உலகத்தின் பரிவுக்காக நாங்கள் காத்துக் கொண்டிருக்கின்றோம். உலகம் அதிகம் பிராந்தியங்களின் செல்வாக்குக்குள் சுருங்கிவருகின்றது. இன்றைய உலக சூழலில் சீனாவின் செல்வாக்கு அபரிமிதமானது. சீனாவின் செல்வாக்கு மேலும்மேலும் அதிகரித்துச் சென்றால், மனித உரிமை மற்றும் ஜனநாயக செல்நெறியை பாதுகாப்பது பெரும் சவாலாகும். சீனா அடிப்படையிலேயே மனித உரிமை மற்றும் ஜனநாயக பொறிமுறைகளுக்கு எதிரான நாடு. மனித உரிமைகளை பாதுகாக்க மறுக்கும் அதற்கான பொறுப்பை தட்டிக் கழிக்கும் நாடுகளுக்கு இப்போது சீனாதான் உற்ற காவலன்.

அமெரிக்காவின் - மேற்குலகின் அழுத்தங்களை எதிர்கொண்ட அனைத்து நாடுகளுமே சீனாவை ஒரு வாய்ப்பான இரண்டாவது தெரிவாக நோக்குகின்றன. இந்த நிலைமையானது மனித உரிமை மற்றும் உலகளாவிய நீதிக்கான தேடலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. ஒரு கட்டத்துக்கு மேல் அழுத்தங்களை பிரயோகித்தால் குறித்த நாடு, சீனாவுடன் சென்றுவிடுமோ - என்னும் எச்சரிக்கையுடன்தான் மேற்குலக நாடுகள் தற்போது தங்களின் அழுத்தங்களை மிகவும் கவனமாக எடைபோடுகின்றன. இதற்கு இலங்கைத் தீவும் ஒரு நல்ல உதாரணமாகிவிட்டது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அந்த நீதி கிடைக்க வேண்டுமென்பதுதான் நமது எதிர்பார்ப்பு - ஆனால், எதிர்பார்ப்புகளை வளர்த்துச் செல்லும்போது, உலக நிலைமைகள் பற்றிய உண்மை புரிதல்களும் நமக்கு அவசியமாகும். நாம் சிந்திக்கத் தெரியாத மக்கள் கூட்டமாக இருந்துவிடக்கூடாது.

## குப்பிழான் கற்கரை விநாயகர் தேரேறி அருள் பாலித்தார்!



*யாழ்ப்பாணம், ஒக 30*

*குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாகவும் மிகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றது.*

*நேற்றுக் காலை 08.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை, வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான், வள்ளி- தெய்வானை சமேத முருகப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய முத்தெய்வங்களும் திருநடனத்துடன் உள்வீதியில் எழுந்தருளினர். முற்பகல் 10.15 மணியளவில் முத்தெய்வங்களும் முத்தேர்களில் ஆரோகணித்தனர்.*

*சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு பண்ணுடன் ஓதப்பட்டுப் பின்னர் சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டன. தீபாராதனை வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க முற்பகல் 11 மணியளவில் முத்தேர் பவனி ஆரம்பமானது. முத்தேர்களும் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து அடியவர்கள் அர்ச்சனை செய்து வழிபாடாற்றினர்.*

*முத்தேர்களின் பவனி இடம்பெற்ற போது பல ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் பறவைக் காவடிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றினர். பெண் அடியவர்கள் பலரும் அடியழித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றினர்.*

*இதேவேளை, இந்த ஆலயத் தேர்த் திருவிழாவில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.*

*முத்தேர்களும் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து குப்பிழான் விக்னேஸ்வரா மன்றம் - கனடா ஏற்பாட்டில் பக்கவாத்திய சகிதம் சிறப்பு இன்னிசை நிகழ்வும் நடைபெற்றது. (ஐ)*

## பல்கலை மாணவன் கத்தியுடன் கைது!

*யாழ்ப்பாணம், ஒக. 30*

*யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் பெரும்பான்மையின மாணவன் கத்தியுடன் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டார்.*

*வர்த்தக நிலையம் ஒன்றுக்கு கத்தியுடன் சென்று அங்கு வேலை செய்பவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மாணவனை கைது செய்தனர். (அ)*

## பெண்ணுக்கு எமனானது கைபேசி

*கொழும்பு, ஒக. 30*

*கைபேசியில் உரையாடியவாறே ரயில் பாதையில் சென்றுக் கொண்டிருந்த யுவதி ஒருவர் ரயிலில் மோதுண்டு படுகாயமடைந்து பாணந்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.*


*இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்றுள்ளது.*

*கறுப்பு நிற காற்சட்டையும் மற்றும் மஞ்சள் நிற மேலாடை அணிந்திருந்த 22 வயதுடைய குறித்த யுவதி இதுவரை அடையாளம் காணப்படவில்லை என ரயில்வே பேச்சாளர் தெரிவித்தார். (அ)*



பண்டத்தரிப்பு – வடலியடைப்பு – புதாறனை சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றவேளை...!

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஓகஸ்ட் - 30 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 13**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : பவுர்ணமி**




**மேடம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் சில சூட்சமங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மேலதிகாரிகள். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம், பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீண்வாதங்களை குறைக்கவும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் ஆதரவு பெருகும். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலி ருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். எதிலும் பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

# காங்கிரஸ் கட்சியை நீக்கினால் தி. மு. கவுக்கு ஆதரவளிக்க தயார்!

*கரூர், ஓக. 30*

*தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் தர மறுக்கும் காங்கிரஸ் கட்சியை கூட்டணியிலிருந்து வெளியேற்றினால் வரும் மக்களவைத் தேர்தலில் தி. மு. கவுக்கு ஆதரவளிக்க தயார் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.*

*கரூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,*

*கொடநாடு விவகாரத்தில், கார் ஓட்டுநரின் அண்ணன் அளித்த பேட்டி காலதாமதம் என்றாலும் அது வரவேற்கத்தக்கது. இவரை விசாரித்த பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் இவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக அவர் தெரிவித்திருக்கிறார். துணிந்து அவர் சொல்வதை வைத்து உடனடியாக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது கூட்டணியில் இருந்த தி. மு. க., நீட் தேர்வு மற்றும் கச்சதீவு விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீட் தேர்வை கொண்டு வந்தது 'இந்தியா' கூட்டணிதான். நீட் தேர்வு வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டு வென்றவர் நளினி சிதம்பரம். அந்த கட்சியை ஏன் கூட்டணியில் வைத்து உள்ளீர்கள்?*

*காவிரி விவகாரத்தில் தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கும் காங்கிரஸ் கட்சியை கூட்டணியிலிருந்து வெளியேற்றினால், வரும் மக்களவைத் தேர்தலில் நாங்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு, தி. மு. கவுக்கு ஆதரவு அளிக்க தயார்.*

*நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். அவர் என்னுடன் கூட்டணி வைக்க விருப்பப்பட்டால் இணைந்து செயல்படுவேன் - என்றார்.*

*(ஐ)*

# வேளாங்கண்ணி தேவாலயம் கொடியேற்றம் நேற்று ஆரம்பம்!

*நாகப்பட்டினம், ஓக. 30*

*உலகப் பிரசித்தி பெற்ற வேளாங்கண்ணி பேராலய ஆண்டுபெருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.*

*மாலை 5.45 மணியளவில் பேராலய முகப்பிலிருந்து கொடி ஊர்வலம் தொடங்கியது. தஞ்சை மறைமாவட்ட ஆயர் தேவதாஸ் அம்புரோஸ் அடிகளார், தஞ்சை மறைமாவட்ட பரிபாலகர் சகாயராஜ் அடிகளார் ஆகியோர் கொடியை புனிதம் செய்து வைக்க கொடியேற்றம் நடைபெற்றது.*

*விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பெரிய தேர் பவனி எதிர்*



*வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் நடைபெறும்.*

*ஆலய திருவிழாவை ஒட்டி 3,500 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.*

*(ஐ)*

# தமிழகத்துக்கு தண்ணீர் தரக்கூடாதென பா. ஜ. கவே போராட்டம் நடத்துகின்றது!

## தமிழக காங்கிரஸ் சாடல்

*சென்னை, ஓக. 30*

*தமிழகத்துக்கு தண்ணீர் தரக்கூடாது என்று பா. ஜ. க. போராட்டம் நடத்துகிறது என்று காங்கிரஸ் கட்சி சாடியுள்ளது.*

*தமிழ்நாடு காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் எம்.பி. யுமான வசந்தகுமாரின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் நடந்தது.*

*இதில் பங்கேற்ற காங்கிரஸ் தமிழக தலைவர் கே. எஸ் அழகிரி செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில்,*

*காவிரியில் இருந்து தண்ணீர்திறந்துவிட வேண்டும் என்று தமிழக காங்கிரஸும், தமிழக அரசோடு இணைந்து குரல் கொடுத்து வருகிறது. நாளொன்றுக்கு 15 ஆயிரம் கன அடி நீர் விடப்படுகிறது. தண்ணீர் வருவதற்கு முன்பு, காங்கிரஸ் கூட்டணியில் இருப்பதால் தண்ணீர் கேட்க தமிழக அரசு தயங்குகிறது என தெரிவித்தனர்.*

*ஆனால் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட்ட பிறகு, பா. ஜ. க. முன்னாள் முதல்வர்கள் எஸ். ஆர். பொம்மை, எடியூரப்பா போன்றோர் தண்ணீர் திறந்துவிடக் கூடாது என போராட்டம் நடத்துகின்றனர். பா. ஜ. க. தமிழகத்துக்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது -என்றார்.*

# ஜெயலலிதா வழக்கில் ஏலமிடவேண்டிய சொத்து பட்டியல் நீதிமன்றில் தாக்கல்!

*பெங்களூர், ஓக. 30*

*ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் ஏலம் விட வேண்டிய பறிமுதல் செய்யப்பட்ட சொத்துப் பட்டியலை சிறப்பு நீதிமன்றத்தில் இலஞ்ச ஒழிப்புப் பொலிஸார் ஒப்படைத்தனர்.*

*இது தொடர்பான வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நீதிபதி எச்.ஏ.மோகன் முன்பு விசாரணைக்கு வந்தது. ஏற்கெனவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தபடி, ஏலம் விடவேண்டிய பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளின் முழுப் பட்டியலும் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புப் பொலிஸார் சாாபில் அரசுத் தரப்பு வழக்கறிஞர் கிரண் எஸ்.ஜவுளி தாக்கல் செய்தார்.*

*ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி வங்கிக்கணக்கில் முடக்கி வைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பான விவரம், பறிமுதல் செய்யப்பட்ட தங்கம், வெள்ளி பட்டியல் மற்றும் 6 பினாமி நிறுவனங்களில் சொத்துப்பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.*

*பினாமி நிறுவனங்களுக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஏலம் விடுவது தொடர்பான நடவடிக்கை குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிபதியிடம் விவரித்தார். இதைத் தொடர்ந்து, வழக்கு விசாரணையை நாளை மறுதினத்துக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.*

*(ஐ)*

# சரியான தீர்மானத்தை எடுக்காவிடின் புத்தசாசனம் இல்லாதொழிக்கப்படும்!

## எச்சரிக்கிறார் எல்லே குணவங்ச தேரர்

கொழும்பு, ஒக. 30

**மழைக்காலத்துக்கு வெளிவரும் அட்டை பூச்சிகளை போல் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அரசியல்வாதிகள் தேசியம், புத்தசாசனம் ஆகியவற்றை அக்கறையுடன் பேசுவார்கள். பெரும்பான்மையின மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் 2500 வருடகால புத்தசாசனம் இல்லாதொழிக்கப்படும் என தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல்வாதிகளே நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள். ஆனால் பொருளாதார பாதிப்பில் சுமை ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பால் நடுத்தர மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு ஒரு நாள் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாட்டை மீட்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. கடன் பெறுவதையும் மிகுதியாக



உள்ள தேசிய வளங்களை ஏலத்தில் விடுவதையும் தவிர இந்த அரசாங்கத்திடம் பொருளாதார மீட்சித் திட்டங்களும் கிடையாது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறு 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவார்கள் என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். அரசாங்கம் செயற்படும் போது நாங்களும் அதற்கு ஏற்றவாறு செயற்படுவோம்.

மழைக்காலத்துக்கு வெளியில் வரும் அட்டைப் பூச்சிகளை போல் இன்னும் ஓரிரு மாதங்களில் தேர்தல் நெருங்கும் போது அரசியல்வாதிகள் தேசியம், புத்தசாசனம் பாதுகாப்பு, இனம் தொடர்பில் கருத்துரைத்துக் கொண்டு வெளிவருவார்கள். பெரும்பான்மையின மக்கள் இம்முறை சிறந்த தீர்மானத்தை எடுக்காவிட்டால் 2500 ஆண்டு கால பழமை வாய்ந்த புத்தசாசனம் இல்லாதொழிக்கப்படும்- என்றார். (அ)

# இனவாதச் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கமாட்டார்கள்

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஒக. 30

இனவாதப் பிரசாரச் சூழ்ச்சியால் ஆட்சியைப் பிடிக்க நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டார்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இனவாதக் கருத்துக்களைக் கக்கி ஆட்சிப்பீடம் ஏற எத்தனிப்பவர்கள் கடந்த கால வரலாறுகளை மறக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆட்சியை எந்தத் தரப்புக்கு வழங்குவதென நாட்டு மக்களே முடிவு செய்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களை எவரும் முட்டாள்களாக்க முடியாது என்றும், அவர்கள் ஜனநாயக வாதிகளையும், இனவாதிகளையும் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# 8 வயது சிறுவன் துஷ்பிரயோகம் 15 வயது சிறுவன் கைதாகினார்!

வவுனியா, ஒக. 30

வவுனியாவில் 8 வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்ததாக 15 வயது சிறுவன் ஒருவர் வவுனியா பொலிஸாரால் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை முடிவடைந்து மேலதிக வகுப்புக்காக வவுனியா, வெளிக்குளம் பகுதிக்குச் சென்ற 8 வயது சிறுவனை அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து நேற்று முன் தினம் மாலை 15 வயதுச் சிறுவன் ஒருவன் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதன் பின், 8 வயது சிறுவன் வீடு சென்று தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த சிறுவன் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் வைத்தியசாலை பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து 15 வயது சிறுவன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கத் திட்டம்!

கொழும்பு, ஒக. 30

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி குறிப்பிட்டார்.

அதன்படி 40 வயது பூர்த்தியடைந்தவர்களுக்காக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 30

கடந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் ஆயிரத்து 27.2 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தினை காட்டிலும் ஜூலை மாதத்தில் 2.18 ஆக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த வருட ஜூன் மாதத்தை காட்டிலும், 11.79 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆடை, துணி மற்றும் இறப்பர் உள்ளிட்ட தயாரிப்புகள் மற்றும் தெங்கு, மற்றும் தென்னை சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கான கேள்வி குறைந்தமை கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் ஏற்பட்ட ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இன்று வங்கிகள் திறக்கப்படும்



கொழும்பு, ஒக. 30

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாத்திரம் இன்று அரச வங்கிகள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அரச வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் நலன்புரி கொடுப்பனவுக்காக வங்கிகள் இவ்வாறு திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

அத்துடன் நேற்று முன் தினம் முதல் விபரம் சரிபார்க்கப்பட்ட 8 லட்சம் பயனாளிகளுக்குரிய, ஜூலை மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க இயற்கையான திரவ உணவு வழங்கவேண்டும்!

## பெற்றோருக்கு மருத்துவர்கள் அறிவுறுத்தல்

கொழும்பு, ஒக. 30

இந்த நாட்களில் அதிக வெப்பநிலை காரணமாக குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க இயற்கையான திரவ உணவுகளை வழங்குமாறும், வழமையை விட அதிகமாக தண்ணீர் வழங்கவேண்டும் என்றும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த நாட்களில் அதிக வெப்பம் நிலவுவதால் சிறுவர்கள் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்களில், சில குழந்தைகள் காரணமின்றி அழலாம், சில குழந்தைகளுக்கு தலைவலி, வாந்தி, தூக்கம் வரலாம், சில குழந்தைகளுக்கு தூக்கமின்மை, பசியின்மை போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். மேலும் காய்ச்சல் இல்லாவிட்டாலும், அதிக உடல் வெப்பநிலை மற்றும் வியர்வை காரணமாக இந்த அறிகுறிகள் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், அதிக உஷ்ணத்தினால் தோல் நோய்களும் ஏற்படக்கூடும் எனத் தெரிவித்த வைத் தியர் தீபால் பெரேரா, இதனைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு குழந்தையும் காலையிலும் மாலையிலும் 20 நிமிடங்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிக்கவேண்டும் என்று கூறினார்.

இக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ள பிரதேசங்கள் காணப்படுவதாகவும் அவ்வாறான பிரதேசங்களில் கூட குழந்தைகளுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்க வேண்டும் எனவும் அசுத்த நீரைக் குடிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதாகவும் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்தார். (அ)

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து:**

# இடைக்காலக் கொடுப்பனவுக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம்

கொழும்பு, ஒக. 30

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்திற்கான இடைக்கால கொடுப்பனவிற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேவையான அறிவிப்புகள் கப்பலின் காப்புறுதி நிறுவனம் மற்றும் சட்டத்தரணி நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சமர்ப்பித்த இடைக்கால இழப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த இழப்பீடு பெறப்படவுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் இடைக்கால நட்டஈடாக 890 இலட்சம் டொலர் மற்றும் 16 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைக்கால இழப்பீட்டை வழங்குவதற்கு கப்பல் நிறுவன காப்புறுதி நிறுவனமும் சட்டத்தரணிகள் நிறுவனமும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தன.

அது தொடர்பான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை அந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, இரு தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். (அ)

# அவசர உதவி செயல்திட்டம் ஊடாக 3 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பயன்

## உலக உணவுத்திட்ட அறிக்கையில் தகவல்

**கொழும்பு, ஓக. 30**

**பொருளாதார நெருக்கடியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்போருக்கு உதவும் நோக்கில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அவசர உதவிச் செயல்திட்டத்தின் ஊடாக இதுவரை யில் 3 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாக உலக உணவுத்திட்டம் தெரி வித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்பான உலக உணவுத் திட்டத்தினால் கடந்த ஜூலை மாதம் நாட்டின் உணவுப்பாது காப்பு நிலைவரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட் டின் அடிப்படையில் வெளியி டப்பட்ட அறிக்கையிலேயே இந்தத் தகவல்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

அவ்வறிக்கையின் பிரகாரம் உலக உணவுத்திட்டத்தினால் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட அவசர உதவி செயற்திட்டத்தின் ஊடாக இது வரையில் சுமார் 3 மில்லியனுக் கும் மேற்பட்டோர் உதவிகளைப் பெற்றிருக்கின்றார்கள். அதே போன்று சுமார் 3.9 மில்லியன் மக்கள் ஓரளவு உணவுப்பாது காப்பின்மையால் பாதிக்கப்பட் டிருக்கக்கூடுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

அதேபோன்று பொருளா தார நெருக்கடியினால் பாதிக் கப்பட்டுள்ள மாணவர்களுக்கு உதவும் நோக்கில் உலக உணவுத் திட்டத்தினால் ஆரம்பிக்கப் பட்ட தேசிய பாடசாலைகளுக் கான உணவு வழங்கல் திட்டத் தின்கீழ் நாடளாவிய ரீதியில் 9 மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அவசியமான அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டுள் ளன.

மேலும் நாட்டின் விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில் 2023 இல் விவசாய மற்றும் பயிர்ச்செய்கை உற்பத்தி வெளி யீடுகளின் அளவு சாதக மட்டத் தைப் பதிவு செய்யவில்லை என் றும், பயிர்ச்செய்கைக்கு அவசி யமான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் விவசாயி கள் பாரிய நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளமை அவதானிக் கப்பட் டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு உணவுப்பொருட் களின் உயர்வான விலைகள் மக் கள் அவற்றைப் பெற்றுக்கொள் வதில் நெருக்கடிகளைத் தோற் றுவித்திருப்பதாகவும், இது பெருமளவான மக்களின் உண வுப்பாதுகாப்பு நிலை கேள்விக் குட்படுத்தப் படுவதற்குக் கார ணமாக அமைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டிலுள்ள குடும்பங்கள் மத்தியில் நேரடி யாக மேற்கொள்ளப்பட்ட ஆய் வின் பிரகாரம் 3.9 மில்லியன் மக்கள் ஓரளவு உணவுப்பாது காப்பின்மைக்கு முகங்கொடுத் திருப்பதாகவும், 100 000 மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின் மைக்கு முகங்கொடுத்திருப்பதா கவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று 56 சதவீத மான குடும்பங்கள் தமது உண வுத்தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்குப் பல்வேறுபட்ட மாற்றுவழிகளைக் கையாளும் அதேவேளை, கடந்த 2022 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது மிகக்குறைந்த மட் டத்திலான முன்னேற்றமே அடையப்பட்டிருக்கின்றது என்று உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ரணில் - சஜித்தை சங்கமிக்க வைக்க அரசியல் களத்தில் நகர்வு ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 30

ஐக்கிய தேசியக் கட்சியை யும், ஐக்கிய மக்கள் சக்தியை யும் இணைப்பதற்கான நகர்வு கள் அரசியல் களத்தில் முன்னெ டுக்கப்பட்டுவருவதாக நம்பகர மான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் சகாவாகக் கருதப்படு கின்ற முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஊடாகவே ஏற்பாடுகள் இடம்பெற்று வரு கின்றன என தெரியவருகின்றது.

இந்த முயற்சியின் ஓர் அங்க மாகவே மீண்டும் தாய்வீடு திரும்புங்கள் என சஜித் அணிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் முக் கியஸ்தரான ரவி கருணாநாயக்க ஓரிரு நாட்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்துள்ளார்.

சஜித் அணியில் உள்ள தலதா அத்துகோரள, கபீர் ஹாசீம், ரோகினி கவிரத்ன உள்ளிட்ட எம்.பிக்கள் இரு அணிகளும் இணைவதற்கு தமது ஆதரவை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த சம்மேளனம் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதன்போதும் இணைவுக்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்பட வுள்ளது என தெரியவருகின்றது.

# போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் கிருமி தொற்றுக்கு உள்ளாகியதால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் - ஆனைக் கோட்டை பகுதியில் ஹெரோ யின் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் கிருமி தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்தார்.

திடீர் சுகயீனம் காரணமாக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.

இந்தநிலையில், அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோத னையின்போது, கிருமி தொற் றுக்கு உள்ளாகியிருந்தமை கண்டறியப்பட்டதாக வைத்தி யர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் ஊசியின் மூலம் போதைப்பொருளை உட்செலுத்திக் கொண்டுள்ளமை பரிசோதனையின் போது தெரிய வந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் போதைப்பொருளுக்கு அடிமை யான இளைஞன் ஒருவர் கிருமி தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்க!

கொழும்பு, ஓக. 30

அடுத்த ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடுவதற்கான வேட்பாளராக, தாம் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழுவினால் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன் தினம் இரவு ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப் பிட்டார்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற கட்சியின் நிறைவேற்று குழு கூட்டத்தில் இந்த தீர்மா னம் எட்டப்பட்டதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார். (அ)

# 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் எயிட்ஸ் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 30

2023ஆம் ஆண்டின் இரண் டாவது காலாண்டு பகுதியில் இலங்கையில் எயிட்ஸ் நோயா ளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

2009 ஆம் ஆண்டுக்கு பின் னர் 2023 ஆம் ஆண்டின் இரண் டாவது காலாண்டு பகுதி லேயே எயிட்ஸ் நோயாளர்க ளின் எண்ணிக்கை பல மடங் காக அதிகரித்துள்ளது.

தேசிய எஸ்.டி.டி - எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டு பகுதியில் 181 புதிய எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக்காலப்பகுதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 26 ஆண்களும் 3 பெண்களும் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்கள். ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற் பட்டவர்கள்.

இதே காலாண்டு பகுதியில் எயிட்ஸினால் 13 உயிரிழப்புக ளும் இடம்பெற்றுள்ளன. (அ)

# ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் 37ஆவது ஆசிய பசுபிக் மாநாடு இலங்கையில்!

கொழும்பு, ஓக. 30

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் 37 ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட் டுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் குறித்த மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில், அரசாங்கத்தின் ஆதரவை பெறு வதற்கு நேற்று முன் தினம் விவ சாய அமைச்சர் மஹிந்த அமர வீரவினால் அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டது.

குறித்த யோசனைக்கு, அமைச் சரவை அங்கீகாரம் கிடைத்துள் ளதாகவும் விவசாய அமைச்சர் கூறினார். (அ)

# ஓகஸ்ட்டில் சரிவு நிலையை சந்தித்துள்ள சுற்றுலாத்துறை

கொழும்பு, ஓக. 30

ஓகஸ்ட் மாத இறுதியில் வாராந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சற்று சரிவு நிலை காணப்படுவதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் நிர்ணயிக் கப்பட்ட சுற்றுலாப் பயணிக ளின் வருகை இலக்கில், 80 சத வீதத்துக்கும் அதிகமானவை. ஆனால், மாதத்தின் முதல் 27 நாட்களில் எட்டப்பட்டுள்ள அறிக்கையின் படி சுற்றுலாப்ப யணிகளின் எண்ணிக்கை 142,000-145,000 ஆக பதிவாகி யுள்ளதாக தரவுகள் தெரிவிக் கின்றன.

ஓகஸ்ட் 01 முதல் 27 வரை, இலங்கை மொத்தம் 123,285 சர்வதேச பார்வையாளர்களை வரவேற்றுள்ளது.

தினசரி வருகை சராசரி தற் போது 4,566 ஆக இருப்பதால், இலங்கை சுமார் 142,000-145,000 பார்வையாளர்களுடன் ஓகஸ்ட் மாதத்தை முடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், நாளாந்த வருகை கள் எதிர்வரும் நாட்களில் குறை யுமாயின் ஓகஸ்டில் நிர்ணயித்த இலக்கான 149,075 இலக்கை இலங்கை இழக்க நேரிடும் என வும் அந்த தரவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதத்தை பொருத் தவரை முதல் வாரத்தில் 35,775 ஆகவும், நான்காவது வாரத்தில் (22-27) 20,273 ஆகவும் பயணி களின் வருகை குறைந்துள்ளது.

பாடசாலைகளுக்கான கோடை விடுமுறையின் முடி வில் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு விடுமுறை காலம் பார்வையாளர்களின் வீழ்ச்சிக்கு காரணமாக இருக்க லாம் எனவும் அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஆங்கிலக்கற்கையை வெற்றிகரமாக முடித்த 5 பாராளுமன்ற உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக. 30

தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கில கற்கைநெறியை வெற் றிகரமாக முடித்துள்ளனர்.

இவர்களுக்கு கற்கைநெறி வெற்றிகரமாக முடித்தமைக் கான சான்றிதழ்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

தேசியப்பட்டியலில் தெரி வான எம்.பி ஒருவர், கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் எம்.பி., மற்றும் காலி, குருநாகல், மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த எம். பி.க்களே இந்தப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள் ளனர்.

ஆரம்பத்தில் 15 எம்.பி.க்கள் ஆங்கிலப் பாடநெறியை கற்க பதிவு செய்திருந்த போதிலும் இறுதியில் ஐந்து பேர் மாத்தி ரமே பயிற்சியை நிறைவுசெய் துள்ளனர்.

எம்.பி.க்களின் வசதிக்காக பாராளுமன்ற அமர்வு நாட்க ளில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதுடன், எம். பி.க்கள் தவிர, 42 பாராளுமன்ற ஊழியர்களும் ஆங்கில மொழி பாடத்தை கற்றுள்ளனர். (அ)

# தோல்விப் பயத்தாலேயே தேர்தலை இழுத்தடிக்கிறார் ஜனாதிபதி ரணில்

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 30

**தோல்வி பயத்தாலேயே உள்ளாட்சிசபை மற்றும் மாகாணசபை தேர்தல்களை நடத்தாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடித்து வருகின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெற்றால் அதன் முடிவு எவ்வாறு அமையும் என்பது ஜனாதிபதிக்கு தெரியும். மாகாணசபைத் தேர்தலிலும் அதே கதிதான். அவ்வாறு நடந்தால் ஜனாதிபதி தேர்தலில் தனக்கு இடம் கிடைக்காது என்பதும் ரணிலுக்கு தெரியும். அதனால்தான் முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முற்படுகின்றார்.

தேர்தலை இழுத்தடிக்கும் ரணிலின் முயற்சியை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது விடயத்தில் மட்டும் எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்படும்.-என்றார். (அ)

# இலங்கை - தாய்லாந்து இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

கொழும்பு, ஓக. 30

இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை அடுத்த வருடத்தில் ஏற்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்திற்காக இந்த வருடத்தில் மாத்திரம் இரண்டு நாடுகளுக்கு இடையில் மேலும் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாதம் இடம்பெற்ற 6ஆவது சுற்று பேச்சுவார்த்தையின் போது, முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, முதலீடு, வர்த்தக மேம்பாடு, தொழிநுட்ப தடைகள் மற்றும் சட்டசிக்கல்கள் குறித்த அனைத்து விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்திற்கான இணக்கப்பாடுகளை இந்த வருட இறுதிக்குள் எட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வருட முற்பகுதியில் அதில் கையெழுத்திடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான எதிர்வரும் ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிகிரியாவை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 30

சிகிரியாவை 9 உப திட்டங்களின் கீழ், சுற்றுலா பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 15 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ் இந்த திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது சம்பந்தமாக முதற்கட்ட திட்டமிடல் மற்றும் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிகிரியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்கள், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையற்ற சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# நலன்புரிக்கு தகுதியற்றோரை நீக்கும் செயல்பாடு ஆரம்பம்

கொழும்பு, ஓக. 30

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதலாம் தவணை நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதன் பின்னர், நலன்புரிக்கு தகுதியற்றோரை நீக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அதற்கு பொதுமக்களிடம் இருந்து உதவி கோருவதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, வார நாட்களில் முற்பகல் 9 மணி முதல், மாலை 4 மணி வரையில், 1924 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 15 இலட்சம் பயனாளிகளில், விபரங்கள் உறுதி செய்யப்பட்ட 8 இலட்சம் பயனாளிகளுக்கான, ஜூலை மாதத்துக்கான 5 பில்லியன் ரூபா கொடுப்பனவு அரச வங்கிகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பயனாளிகள் குறித்த நிதியை பெற்றுக்கொள்ளும் திகதி குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்வரும் நாட்களில் வெளியிடவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தவரின் உடற்பாகம் ஆய்வுக்கு!

கொழும்பு, ஓக. 29

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கோ அமோக்சிக்லாவ் எனும் நோய் எதிர்ப்பு தடுப்பூசியை செலுத்தியதன் பின்னர் உயிரிழந்த நோயாளியின் இரத்த மாதிரிகள் மற்றும் உடற் பாகங்களை பரிசோதனைக்காக வெளிநாட்டுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவின் தலைமையில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக்காயங்களுடன் வரக்காபொல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 50 வயதுடைய ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

பின்னர் தேசிய வைத்தியசாலையில் அவருக்கு வழங்கப்பட்ட கோ அமோக்ஸிக்லாவ் என்ற நோய் எதிர்ப்பு தடுப்பூசியை செலுத்தியதன் பின்னர் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் குறித்த தடுப்பூசி பாவனைக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளியின் மரணம் தொடர்பில், கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கருத்துரைத்த சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ், குறித்த தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்ட விதம் தொடர்பில் சுகாதார அமைச்சு உடனடியாக தெளிவுப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டார்.

குறித்த தடுப்பூசி நிறுவனத்தின் அறிக்கையின் படி, அவர்களுக்கே அந்த தடுப்பூசி தொடர்பான தெளிவில்லை எனவும் ரவி குமுதேஷ் குற்றஞ்சாட்டினார். (அ)

# ஜனாதிபதியாக மீண்டும் நான் பதவியில் இருப்பேன்!

## மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை



கொழும்பு, ஓக. 30

இலங்கையின் ஜனாதிபதியாக மீண்டுமொரு தடவை பதவியில் இருப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்கு பின் வெளிநாடுகளுடன் நல்லுறவைப் பேணி, முழு உலகையும் வெற்றிகொண்டது தமது ஆட்சியில்தான் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாடுகளுடன் இருந்த சுமூகமற்ற உறவுகளை மீள புதுப்பித்து வலுப்படுத்தியது என ஆட்சிக்காலத்தில்தான். நாட்டுக்கு நன்மை பயக்கும் பல உடன்படிக்கைகளையும் கைச்சாத்திட நடவடிக்கைகளை எடுத்திருந்தேன்.

தற்போது தொழிலதிபர்கள் மகிழ்ச்சியாக இல்லை. அரசஊழியர்கள் மகிழ்ச்சியாக இல்லை. மீனவர்களோ, பொதுமக்களோ மகிழ்ச்சியாக இல்லை. பொருளாதார ரீதியாக மக்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இப்போதெல்லாம், பாடசாலைகளுக்குள் போதைப்பொருள் அச்சுறுத்தல் மிகவும் தீவிரமாக உள்ளது. இந்தப் பிரச்னைகளை எதிர்த்துப் போராடுவதற்கு மிகவும் பயனுள்ள நடவடிக்கைகள் தேவை என்பதை நாங்கள் உணர்கிறோம்.

நாம் அதை செய்ய முடியும். ஒரு கட்சி என்ற ரீதியில் அவர்களுக்கான தீர்வுகள் எங்களிடம் உள்ளன. போதைப்பொருளை முற்றாக பாடசாலைகளில் இருந்து ஒழிப்பது கட்டாயம். இது மாணவர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஒருமுறை ஜனாதிபதியாக பதவி வகித்தவர் என்ற வகையில், முந்தைய அனுபவங்களுடன் மீண்டும் பதவி வகிப்பதற்கு எனக்கு எந்த சிரமமும் இல்லை-என்றார். (அ)

# அமைச்சுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்க்க திட்டம்

கொழும்பு, ஓக. 30

ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகளை செயற்திறனுடன் நிர்வகிப்பதற்காகவும் அமைச்சுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் புதிய இணைய வழி மூல திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் வெளிவிவகார அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சின் நடப்பு செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் பலதரப்பு ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு திட்டங்கள் போன்றவற்றினை செயற்திறனுடன் நிர்வகிப்பதற்காகவும், அமைச்சுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் இந்த புதிய இணைய வழி மூல வசதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பன்முகத்தன்மை கொண்ட இந்த முயற்சியானது ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகள் தொடர்பான பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பு போன்றவற்றின் வினைத்திறனான செயற்திறன்களை மதிப்பீடு செய்து அவற்றை இணையவழி ஊடாக பேணுவதற்கு வசதியாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், நேர விரயங்களைத் தவிர்த்து பயனுள்ள வினைத்திறனான குறைவான ஆளணி செயற்பாடுகளுடன் வேலைகளை திறம்பட செய்வதற்கும் இவ் இணையவழி திட்டமானது பயனளிக்கும் எனக் கூறப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உட்பட ஏனைய அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

# ஜனாதிபதி ரணிலின் மௌனம் நல்லதல்ல!

## எச்சரிக்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு, ஓக. 30

**சிங்கள இனவாதிகள் சிலரால் இந்த நாட்டில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இனரீதி யான பாகுபாட்டை முறுகலை ஜனாதிபதி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதும், பூகோள ரீதியில் இந்தியாவும் சீனாவும் இலங்கையைக் கையாள்வதைக் கூட பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுவதைப்போல் இருப்பதும் இந்த நாட்டிற்கு சுபீட்சமானதாக இருக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சமகால அரசி யல் நிலைமை தொடர்பில் கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போது இந்த நாட்டிலே மீண்டும் ஒரு இனக்கலவரம் தோற்றுவிக்கப்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் எமது மக்கள் மத்தியிலே உருவெடுத்திருந்தா லும் இதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய உளவுப் பிரி வும் தன்னுடைய அறிக்கையில் இலங்கையில் ஒரு இனக்கலவ ரம் ஏற்படுவதற்கான வாய்ப்பி ருப்பதாகத் தெரிவித்திருக்கின் றது.

ஒவ்வொரு தேர்தல்கள் வரும் போதும் இனவாதத்தைத் துண் டிவிட்டு அரசியற் செய்வது இந்த நாட்டிலே வழமையாகி விட்டது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும் நாட்டில் ஏற்பட்ட குண்டுவெ டிப்புகளை தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்தி தேசிய பாது காப்புடன் சம்மந்தப்பட்ட ஒரு வர் ஜனாதிபதியாக வர வேண் டும் என்ற ஒரு பிரளயத்தைக் கிளப்பி ஜனாதிபதி ஒருவரைக் கொண்டு வந்தார்கள். அதே போன்று அடுத்த வருடம் எப்ப டியும் ஒரு தேர்தல் ஆண்டா கவே இருக்கப் போகின்றது. நிச் சயமாக ஜனாதிபதித் தேர்தல் நடந்தேயாக வேண்டும் என் கின்ற கட்டாயம் அரசியலமைப் பின் ஊடாக இருக்கிறது. தற் போதைய சூழ்நிலையில் மாகா ணசபைத் தேர்தல்கள் கூட அடுத்த வருடங்களில் நடைபெ றுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இதை மையமாக வைத்து ஒருசில சிங்கள இனவாதிகள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பி னர்களது இல்லங்களைச் சுற்றி வளைக்க வேண்டும் என்றும், பௌத்தத்திற்கு எதிராக வடக்கு -கிழக்கில் தமிழர்கள் செயற்பா டுகின்றார்கள் என்றும் இனத்து வேசத்தைக் கிளப்பி விடுவது மாத்திரமல்லாமல் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது வீட்டின் முன்னால் இரண்டு நாட்கள் புத்த பிக்குகளும், உத யகம்மன்பில் பேன்ற இனவாத அரசியல்வாதிகளும் ஒரு ஆர்ப் பாட்டத்தைச் செய்திருந்தார்கள். இந்த விடயத்தை நாங்கள் வன் மையாகக் கண்டிக்கின்றோம்.

உதயகம்மன்பில கூறுகின் றார், வடக்கு-கிழக்கு தமிழர்க ளின் தாயகம் என்றால் கொழும் பில் சிங்களவர்களின் தலைநக ரில் தமிழர்களுக்கு என்ன வேலை என்று. அவர் ஒன்றை மட்டும் விளங்கிக்கொள்ளவேண்டும். வடக்கு-கிழக்கில் நீங்கள் அடாத் தாக வந்து குடியேறுகின்றீர்கள். ஆனால் தெற்கில் தமிழர்கள் அடாத்தாக வந்து குடியேற வில்லை. நீங்களே வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை உணர்ந்தால் பாராளு மன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து வடக்கு-கிழக் கைப் பிரித்து அதனை ஒரு தனி நாடாக பிரகடனப்படுத்திவிட் டால் அனைவருக்கும் வசதியாக இருக்கும்.

அது மாத்திரமல்லாமல் எதிர் வரும் நாட்களில் இந்திய பாது காப்பு அமைச்சர் இலங்கைக்கு வரவுள்ளார். அத்துடன் சீனா வின் ஆய்வுக் கப்பலும் இலங் கைக்கு வரவிருக்கின்றதாகச் செய்திகள் கூறுகின்றன. மாறி மாறி பூகோள ரீதியாகவும், உள் ளூர் அரசியல் ரீதியாகவும் இலங்கை சிக்கித் தவிக்கின்றது. இதைப் பார்க்கும்போது இலங் கைக்கு என்று ஒரு நிரந்தரமான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள் கைகள் எதுவுமில்லாத ஒட்டு மொத்தத்தில் கொள்கையே இல் லாத அரசாங்கமாக இந்த அர சாங்கமும், ஜனாதிபதியும் செயற் படுகின்றனரோ என்று தான் எண்ணத் தோணுகின்றது.

ஏனெனில் இந்த இன ரீதி யான பாகுபாட்டை முறுகலை ஜனாதிபதி மௌனமாகப் பார்த் துக் கொண்டிருப்பதும், பூகோள ரீதியில் இந்தியாவும் சீனாவும் இலங்கையைக் கையாள்வதைக் கூட பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுவ தைப் போல் இருப்பதும் இந்த நாட்டிற்கு சுபீட்சமானதாக இருக்காது -என்றார். (அ)

# கடுமையான வறட்சி நிலையிலும் வெளிநாட்டு பறவைகள் சஞ்சாரம்

## மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்



மட்டக்களப்பு, ஓக. 30

காலநிலை மாற்றத்தின் கார ணமாக கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடுமையான வறட்சி நிலவுவதுடன் வெளி நாட்டு பறவை இனங்கள் தற் போது சஞ்சரிப்பதை அவதா னிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி, சம்மாந்துறை, நிந்தவூர், மகாஓயா ஆகிய பிர தேச செயலர் பிரிவுகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டம் வவு ணதீவு, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நீர் நிலைகளை நாடி இந்த வெளி நாட்டுப் பறவை இனங்கள் வருகை தருகின்றன.

இம்மாதம் வறட்சி நிலையி லும் பல நாட்டுப் பறவைகளும் இங்கு வந்து தங்குகின்றன. இங்கு வரும் வெளிநாட்டு பறவைகள் ஜனவரி, பெப்ரவரி மாதம் கூடு கட்ட தொடங்கும். மேற்குறித்த பறவைகள் 3000 மைல் தூரம் பறந்து செல்லும் வல்லமை படைத்தவை.

அவுஸ்திரேலியா, சுவிட்சர் லாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிலிப் பைன்ஸ்,சைபிரியா ஆகிய நாடு களிலிருந்து பறவைகள் இங்கு வருகின்றன.

வலசை வந்து ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதம் வரை தங்கி குஞ்சு பொரித்து பிறகு அவற்றுடன் பறந்து செல்கின் றன. 23 க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் இங்கு வந்து கூடு கட் டுவதாக அப்பகுதி மக்கள் குறிப் பிட்டனர்.

இதில் செங்கால் நாரை, பூநாரை, கூழைக்கடா, கடல்கா கம், கடல்ஆலா, கூழைக்கடா, பாம்புத்தாரா ,சாம்பல்நாரை, வெட்டிவாயன், கரன்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், நாரை இனங்கள், அன்னப் பறவை உள்ளிட்ட கொக்கு இனங்கள் வருகின்றமை குறிப்பி டத்தக்கது.

இது தவிர பல ஆயிரம் குடும் பங்கள் இம்மாவட்டங்களில் வறட்சி நிலைமையினால் பாதிக் கப்பட்டிருப்பதுடன் மேற்கு றித்த பிரதேசங்களில் குடிதண் ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள் ளது. (அ)

# பாடசாலைச் சுவரோவியங்கள் அன்னமலையில் திறந்துவைப்பு

காரைதீவு, ஓக. 30

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை சிறீ சக்தி வித்தியாலய சுற்றுமதிலில் வரை யப்பட்ட அழகான சுவரோவி யங்கள் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா வில் பிரதம அதிதியான சம்மாந் துறை வலயக்கல்விப் பணிப்பா ளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கௌரவ அதிதிகளாக சம் மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவ ராஜா மற்றும் ஆசிரிய ஆலோச கர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .



ஜேர்மனியில் வாழும் அன்ன மலையைச் சேர்ந்த கொடை யாளி சித்திரசேனன் விஜிகரனின் ஏற்பாட்டில் வரையப்பட்ட இச் சுவர்ஓவியங்கள் மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் தயா ரிக்கப்பட்டது.

ஜேர்மனியிலிருந்து வந்த கொடையாளி விஜிகரன் தம்ப தியினர் இவ் விழாவில் கலந்து கொண்டனர். (அ)

# நலன்புரி அமைப்பினால் வீடு கையளிப்பு



அம்பாறை, ஓக. 30

பொத்துவில் செங்காமத்து பிரதேசத்தில் நண்பர்கள் நலன் புரி அமைப்பினால் குடும்பம் ஒன்றுக்கு வீடு வழங்கப்பட்டது.

பொத்துவில் பிரதேசத்தில் இயங்கி வரும் நண்பர்கள் நலன் புரி அமைப்பின் முயற்சியினால் அதன் அங்கத்தவர்கள், தனவந் தர்கள் மற்றும் சமூக ஆர்வளர் கள், ஆகியோரின் நிதியுதவி மூலம் செங்காமத்து கிராமத்தில் மிகவும் வறிய நிலையில் காணப் பட்ட குடும்பமொன்றுக்கு மேற் படி வீடு வழங்கப்பட்டது. (அ)

## வெடித்தது புதிய சர்ச்சை

# இந்திய மாநிலத்தை உரிமைகூறி வரைபடத்தை வெளியிட்டது சீனா

பீஜிங், ஒக. 30

சீன அரசாங்கம் தனது நாட்டின் புதிய வரைபடத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டு புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்தியாவின் வட,கிழக்கு மாநிலமான அருணாசல பிரதேசம் முழுவதையும் தனது வரைபடத்தில் இணைத்ததோடு, அக்ஷய் சின் பிராந்தியத்தையும் தனது எல்லைக்குள் அடக்கியுள்ளமையே இந்த சர்ச்சைக்குக் காரணம்.

2023 சீன வரைபடம் எனப் பெயரிடப்பட்ட இந்த வரைபடத்தை சீனாவின் இயற்கை வள அமைச்சு வெளியிட்டுள்ளது. சீனாவின் இந்த புதிய வரைபடம் தென் சீனக் கடலின் சர்ச்சைக்குரிய ஒன்பது வரிக் கோடு (nine-dash line) என்ற பகுதியையும் உள்ளடக்கியுள்ளது.

முன்னதாக கடந்த ஏப்ரல் மாதம் சீன உள்துறை அமைச்சு அருணாசல பிரதேசத்தின் 11 இடங்களின் பெயர்களை மாற்றி அதற்கான அறிவிப்பை வெளியிட்டது.



அருணாசல பிரதேசத்துக்கு உரிமை கொண்டாடி வரும் சீனா, அதனை தன்னாட்சி பிராந்தியமான திபெத்தின் ஓர் அங்கம் எனக் கூறி வருகிறது. திபெத்தின் தெற்கில் உள்ள அருணாசல பிரதேசத்தின் ஜங்னன் பகுதியை சீனா ஜிஜாங் என குறிப்பிட்டுகிறது.

இந்நிலையில், இந்த ஜங்னன் பகுதியைச் சேர்ந்த 11 இடங்களின் பெயர்களை சீன உள்துறை அமைச்சகம் மாற்றி உள்ளது. இதில், அருணாசல பிரதேசத்தின் தலைநகரான இடா நகரின் அருகில் உள்ள ஒரு நகரின் பெயரையும் சீனா மாற்றியது. இந்நிலையிலேயே சீனா தனது புதிய வரைபடத்தை வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## காட்போர்ட் ட்ரோன்கள் மூலம் ரஷ்யாவை தாக்கும் உக்ரைன்!



கீவ், ஒக. 30

அவுஸ்திரேலியாவின் சைபாக் நிறுவனத்தினால் மிக மலிவாகத் தயாரிக்கப்படுகின்ற கோர்வோ என்ற ஆளில்லா விமானங்களை (Corvo drones) உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்கு எதிரான பல தாக்குதல்களுக்குப் பயன்படுத்தி வருகின்றன.

'பிட்சா' அட்டைப் பெட்டிகளை ஒத்த கார்ட்போட் மட்டைகளில் றபர்பான்ட், பசை போன்றவற்றைக் கொண்டு மிக இலகுவாகத் தயாரிக்கப்படுகின்ற இந்த ட்ரோன்கள் ஐந்து கிலோ எடையைச் சுமந்து கொண்டு 125 கிலோமீற்றர்கள் தூரம் பறக்கக் கூடியவை. ராடார்கள் மற்றும் வான் காப்பு சாதனங்களில் இலகுவில் சிக்காமல் தப்பி செல்லக் கூடியவை. மழை நீரில் நனைந்தால் மட்டுமே இலக்குத் தவறவிடும். மற்றும்படி போர் முனைகளில் உளவு வேலைகள், உணவு வழங்கல், இலக்குகளைத் தாக்குவது போன்ற பல நோக்கங்களுக்காக இவை தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிறன்று ரஷ்யாவின் எல்லைக்குள் அமைந்துள்ள கேர்க்ஸ் பிராந்தியத்தில் அங்குள்ள வான் தளம் உட்பட சில இலக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் உட்பட வெற்றிகரமான பல தாக்குதல்கள் இவ்வாறு கார்ட்போட்டில் உருவான ஆளில்லா விமானங்கள் மூலமே நடத்தப்பட்டன என்று உக்ரைன் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

போரில் உக்ரைனும் ரஷ்யாவும் ஆளில்லா விமானம் மூலமான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகின்றன. ரஷ்ய தலைநகரமான மொஸ்கோ மீதும் உக்ரைன் தரப்பினால் உரிமை கோரப்படாத ஆளில்லா விமான தாக்குதல்கள் அடிக்கடி நடக்கின்றன. வான் பாதுகாப்புச் சாதனங்கள் சில சமயங்களில் அவற்றைத் தடுக்காமல் கோட்டை விடுவதால் ஆளில்லா விமானங்களின் மிக உயர்ந்த கட்டடங்களில் மோதிச் சிறு சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. (ஐ)

## சரியாக ஹிஜாப் அணியாதோருக்கு மொட்டை!

ஜகார்த்தா, ஒக. 30

இந்தோனேசியாவில் ஹிஜாப் சரியாக அணியாத மாணவிகளுக்கு ஆசிரியர் மொட்டை அடித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவின் முக்கிய தீவுகளில் ஒன்றான கிழக்கு ஜாவாவில் உள்ள லாமங்கன் நகரில் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்கும் படிக்கும் இஸ்லாமிய மாணவிகள் 14 பேர் ஹிஜாப் சரியாக அணியாமல் சென்றனர். இதையடுத்து அவர்கள் தலையில் உள்ள பாதி முடியை மொட்டை அடித்து ஆசிரியர் ஒருவர் அவமானப்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் இந்தோனேசியாவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், மாணவிகளின் பெற்றோர்களிடம் பாடசாலை நிர்வாகம் மன்னிப்பு கேட்டதுடன், மொட்டை அடித்த ஆசிரியரை பணி நீக்கம் செய்துள்ளது. (ஐ)

## இத்தாலியில் படகு கவிழ்ந்து ஐவர் மரணம்

எதேன்ஸ், ஒக. 30

கிரீஸின் ஏஜியன் கடலில் புலம்பெயர்ந்தோரை ஏற்றிச்சென்ற இரண்டு படகுகள் கவிழ்ந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

சமோஸ் தீவில் படகு மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த பெண் மற்றும் குழந்தை பலியாகினர். மேலும் 35 பேர் மீட்கப்பட்டனர் என்று கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. (ஐ)

## பெண்ணின் மூளையில் உயிருடன் வாழ்ந்த புழு!

சிட்னி, ஒக. 30

அவுஸ்திரேலியாவில் ஓர் ஏரிக்கரை அருகில் வசித்து வந்த 64 வயது பெண்மணிக்கு நீண்ட நாட்களாக உடல் ஆரோக்கியத்தில் பல குறைபாடுகள் இருந்து வந்தன.

நிமோனியா எனப்படும் மார்புச்சளி, வயிற்று வலி, வயிற்று போக்கு, வறட்டு இருமல், காய்ச்சல், இரவு வியர்வை, மனச்சோர்வு மற்றும் நினைவாற்றல் குறைபாடு ஆகியவற்றுக்கு அவர் நீண்ட நாட்களாக சிகிச்சை எடுத்து வந்தார். ஆனால் மாத்திரை, மருந்துகளால் அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை.

2021 ஜனவரி கடைசியில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு நீண்ட மருத்துவ பராமரிப்பு வழங்கப்பட்டது. ஆனால் நிலைமை சீராகவில்லை.

2022இல் அவர் உடல்நிலை மோசமடைய தொடங்கியது. இதையடுத்து அவரின் மூளையை ஸ்கான் செய்ய மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

பரிசோதனை முடிவில் அவரின் மூளையில் ஒரு பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து சத்திர சிகிச்சை மூலம் அதனை அகற்றினர். அப்போது, "புதிய பொருள்" ஒரு உயிருள்ள புழு என தெரிந்தது. அந்த புழு பிரகாசமான சிவப்பு நிறத்தில், சுமார் 3 அங்குலம் (8 சென்றிமீற்றர்) நீளம் இருந்தது.

இதன் பின்னர் அந்தப் பெண் மருத்துவ பராமரிப்பு மற்றும் ஆலோசனைகளால் நலமடைந்தார்.

அறிவியல் மொழியில் ஓஃபிடாஸ்கரிஸ் ரொபர்ட்ஸி (Ophidascaris robertsi) என அழைக்கப்படும் பாம்பு வகையை சேர்ந்த இவ்வகை புழுக்கள் அவுஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளில் காணப்படும்.

இந்த பெண்மணியின் வாழ்க்கை முறைக்கோ, தொழிலுக்கோ பாம்புகளோடு எந்த தொடர்பும் இல்லையென்றாலும் அவர் வசித்து வந்த பகுதியில் உள்ள ஏரியில் பாம்புகள் அதிகம் காணப்படும் என்பதால் அனேகமாக அவர் அதிகமாக உண்டு வந்த நியூசிலாந்து கீரை வகைகளில் அந்த புழுவின் முட்டைகள் இருந்து அவர் அதனை உண்ணும்போது உள்ளே சென்று, புழுவாக உயிர் பெற்று, இரத்தத்தில் கலந்து, மூளைக்கு சென்று, அங்கேயே உண்டு அதன் மூலம் உயிர் வாழ்ந்து வந்திருக்கலாம் என ஊகிக்கின்றனர்

"உயிருள்ள புழு ஒருவரின் மூளையில் வாழ்வது இதுதான் உலகிலேயே முதல்முறை. ஆனால், இதுபோன்ற மருத்துவ வழக்குகள் எதிர்காலத்திலும் வரக்கூடும்" என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

## நிலவை தொடர்ந்து சூரியனை ஆய்வு செய்கின்றது இந்தியா!



சிறீஹரிகோட்டா, ஒக. 30

பல வருட கால கனவு திட்டமான நிலவு பயணம் வெற்றிபெற்றமையை அடுத்து சூரியனுக்கான தனது ஆய்வு பயணத்தை இந்தியா ஆரம்பித்துள்ளது.

நிலவுக்கு சந்திரயான் 3 என்ற விண்கலத்தை இந்தியா நிலவுக்கு அனுப்பியது. இந்த விண்கலகலம் சந்திரனில் தரையிறங்கி ஆய்வு செய்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவின் அடுத்த கனவுத் திட்டமான சூரிய திட்டத்தை செயல்படுத்தும் பணியில் இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது.

விண்வெளியில் இருந்தவாறு சூரியனை ஆய்வு செய்யவுள்ள ஆதித்யா-எல்1 ஏவூர்தி செப்ரெம்பர் 2ஆம் திகதி விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சூரியனை ஆய்வு செய்யும் இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வகமான ஆதித்யா-எல்1, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆம் திகதியன்று 11:50 மணிக்கு சிறீஹரிகோட்டாவிலிருந்து ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

சூரியன் - பூமி அமைப்பில் சுமார் 15 இலட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள லாக்ரேஞ்ச் புள்ளி 1 (எல் 1) ஐச் சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்படும். இந்த புள்ளியை விண்கலம் அடைய 120 நாட்களுக்கு மேல் ஆகும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

தடையின்றி தொடர்ந்து சூரியனைப் பார்க்கும் வகையில் இந்த விண்கலம் அமைக்கப்பட்டுள்ளதால், அது சூரியன் குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டுப் பயணங்களை அரச தரப்பு தவிர்க்கவேண்டும்

## ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்



**கொழும்பு, ஓக. 30**

**எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம், 6 ஆம், 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு விசேட அறிவித்தல் விடுத்துள்ளார்.**

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ள நிலையிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் அவகாசம் தேவை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கோரியதுடன் அதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. (அ)

# 3 மாதங்களில் இந்தியாவில் இருந்து 92 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

கொழும்பு, ஓக. 30

அடுத்த 3 மாதங்களில் இந்தியாவில் இருந்து 92.1 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முன்வைத்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையால் பரிந்துரைக்கப்பட்ட 3 இந்திய நிறுவனங்களிடமிருந்து இலங்கை அரசாங்கம் விலைக்கோரல்மனுவை கோரியுள்ளது.

விலை விவரங்களின் அடிப்படையில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை கருத்திற் கொண்டு, அரச வர்த்தக (இதர) கூட்டுத்தாபனத்தின் ஊடாக முட்டைகள் இறக்குமதி செய்யப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

முட்டையின் விலையை ஸ்திரப்படுத்தும் வகையிலும், உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை முன்னர் அனுமதி வழங்கியிருந்தது. (அ)

# விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை



கொழும்பு, ஓக. 30

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த கொடுப்பனவை அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் உரிய தீர்மானம் உடனடியாக அமுல்படுத்தப்படும் எனவும் கல்வியமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மூளைக்காய்ச்சல் நோய் சமூகத்தில் பரவக்கூடும்

## அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 30

கராப்பிட்டி மருத்துவமனையில் எட்டு மாதக் குழந்தை மூளைக்காய்ச்சல் நோயால் உயிரிழந்தது. இதையடுத்து, சமூகத்தில் மூளைக்காய்ச்சல் நோய் பரவக்கூடிய நிலை உள்ளதாகக் கருதப்படுகின்றது.

சமீபத்தில் காலி சிறைச்சாலையில் இந்த நோய் முதலில் கண்டறியப்பட்டது. மூளைக் காய்ச்சல் நோய் போன்ற அறிகுறிகளுடன் குழந்தை கராபிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அந்தக் குழந்தை கடந்த சனிக்கிழமை உயிரிழந்தது.

காலி சிறைச்சாலைக்குள் பரவி வரும் மூளைக்காய்ச்சல் நோயால் மரணம் நேரிட்டதா என சுகாதார அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், இந்த மரணம் மூளைக்காய்ச்சல் நோயுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. எனினும். இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் கோனார சோமரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, காய்ச்சல், சளி, சோர்வு, வாந்தி அல்லது குளிர்ந்த கைகள் மற்றும் கால்கள் போன்ற அறிகுறிகளை அனுபவித்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு மக்களை சுகாதாரப் பிரிவு கேட்டுள்ளது. (ஐ)

# மனைவியின் சகோதரியை துப்பாக்கியால் சுட்ட கணவர்!

கொழும்பு, ஓக. 30

பங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெதியகல பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். நேற்று முன் தினம் இரவு இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த 25 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான இவர் சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகவும், காயமடைந்த பெண்ணின் சகோதரியின் கணவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர் நேற்று அதிகாலை அக்குரெஸ்ஸ பொலிஸாரால் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

அக்குரெஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஆதிகதிர்காமம் கபில்வத்தை யாத்திரை நேற்று ஆரம்பம்!



காரைதீவு, ஓக. 30

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக் கான அற்புதமான, அமானுஷ்யமான, ஆபத்தான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகியது.

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவ சங்கர் ஜி தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தைக்கான யாத்திரை ஆரம்பமாகியது.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில் தங்கியிருந்து வழிபாடியற்றுவார்கள். (அ)

# சுதந்திரக் கட்சி மாநாட்டில் சந்திரிகாவும் பங்கேற்பார்!

## மைத்திரிபால நம்பிக்கை

கொழும்பு, ஓக. 30

எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சி மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் பங்கேற்பார் என தான் நம்புவதாக மைத்திரிபால சிறிசேன கூறினார்.

கட்சியால் வழங்கப்பட்ட அழைப்பிதழை முன்னாள் ஜனாதிபதி ஏற்றுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

"கட்சி மாநாட்டால் சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித குழப்பமும் இல்லை. பொருளாதார பிரச்னையைக் கருத்திற்கொண்டே மாநாட்டை குருநாகலில் நடத்தாமல் கொழும்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. கொழும்பில் நடைபெறவுள்ள மாநாட்டில் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கவுள்ளனர்." எனவும் மைத்திரிபால சிறிசேன கூறினார். (அ)

## அரசின்...

மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் ஐ.நா விடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐ.நாவின் வதிவிட பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸ நாயக்க ஆகியோருக்கு இடையில் நேற்று முற்பகல் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடை பெற்ற இச்சந்திப்பின்போது ஐக்கிய நாடு கள் தாபனத்தின் இலங்கை அலுவலகத் தின் அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் எட்வர்ட் டும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையின் நிகழ்கால பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமை கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் பொருளாதார இலக் குகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மக்கள் மேலும் துன்பத்திற்கு ஆளாகியுள் ளதாக சுட்டிக்காட்டிய அநுர குமார திஸநாயக்க, தேர்தலை நடத்தாது அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமை களை பறித்துள்ளமை தொடர்பிலும் ஐ. நா. பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

தேர்தலை நடத்துவதற்கு கட்டளையை பிறப்பித்த நீதிபதிகள் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுதாகவும், மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்கு உட்படுத்தி அரசாங்கம் ஜனநாயக விரோத போக்கை முன்னெடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (அ)

## வைத்தியசாலை...

இதன்படி வைத்தியசாலை பணிப் பாளர் விசேட மருத்துவர் பிரியந்த கருணாரத்ன உட்பட வைத்தியசாலை நிர்வாகத்தினர் பலர் முல்லேரியா பொலிஸாரிடம் வந்து இந்த பொருட் களை கையளித்து பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கினர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த ஊழியர் ஐஸ் போதைப்பொ ருள் கடத்துவதாக வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் குறித்த பணியாளரின் லொக்கரை திறந்து பார்த்தபோது அதில் ஐஸ் போதைமருந்துகள் மற்றும் உபகர ணங்களை கண்டெடுத்துள்ளனர். (அ)

## இலங்கையில்...

கவும் கொரிய தொழிலதிபர் கங் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்வதற்கு தாம் மிகவும் ஆர்வத் துடன் இருப்பதாகவும் அதற்கான உதவிகள் கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டால் பல பில்லி யன் ரூபாய்களை முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒலுவில் கடற்றொழில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தொழிற்சாலைகளை நிர்மாணிப் பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள் ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இத் தொழிற்சாலை இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும்அதன் பொருட்டு வர்த்தக அமைச்சுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (அ)

## ராஜபக்ஷர்களுக்...

யின் சில உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்ற சில உறுப்பினர்களும் தந்தார்கள். அப்போது அந்த அணி இல்லை என்றால் எனக்கு அந்த பலம் இருந்திருக்காது.

கட்சியின் கிளைகளை நிறுவினர். எனவே பொதுஜன பெரமுனவில் உள்ள எமக்கு கட்சியை பாதுகாக்க பெரும் உரிமை உள்ளது. மகிந்த அரசியலுக்கு வருவதாக கூறியபோது பஸிலின் அமைப்பு பலம் கட்சியை நாடளாவிய ரீதியில் வழிநடத்தியது.

அந்த அமைப்பு பலத்தினால்தான் ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பாரா ளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வித்தியாசத்தில் வெற்றி பெற முடிந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த நாடு பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேர்ந்தது.

அது எங்களால் ஏற்படவில்லை. முப்பது வருட யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் அழிந்தது. கறுப்பு ஜூலை 83, 88/89 பயங்கரவாதம், போராட்டம் மற்றும் இயற்கை பேரழி வுகள் பொருளாதாரத்தை அழித்தன. அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 88/89 பயங்கரவாதத்தை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது மக்களுக்கு நினைவிருக்கலாம்.

பின்னர், கொரோனா தொற்றுநோ யால் முழு நாட்டையும் மூட வேண்டி யிருந்தது. அப்போது நாட்டை மூட வேண்டாம் என்றார்கள். மீண்டும் நாட்டை திறக்க முற்பட்டபோது மக்கள் செத்து மடிவார்கள் என்று கூறி நாட்டை திறக்க வேண்டாம் என அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர். ஆனால், பின்னர் கோட்டாபய இந்த நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்க தடுப்பூசிகளை வழங்கிய பின்பே நாட்டைத் திறந்தார். எனக்கு இப்போது அது நினைவில் இல்லை. நாட்டின் பொருளாதாரம் சரிந்தது எங்களால் அல்ல. ரஷ்ய - உக்ரைன் போரால் பல நாடுகள் பாதிக்கப்பட்டன.

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குத் திரும்பத் தொடங்கியபோது போராட் டம் தொடங்கியது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பெற்று மக்கள் எதிர் பார்த்த இடத்திற்கு நாட்டை கொண்டு செல்ல முற்பட்ட போது ஆரம்பித்த போராட்டத்தினால் மொட்டு கட்சி யினர் என்னென்ன எதிர்கொள்ள நேரிட் டது என்பது எமக்கு தெரியும்-என்றார்.

## சீனக் கப்பல்...

நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியிருந்தது.

எவ்வாறாயினும், கடல்சார் பாதுகாப் பில் கவனம் செலுத்தி சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகை குறித்து இந்திய அர சாங்கம் இலங்கையிடம் கவலை தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரங்காவின்...

தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கரு ணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியது.

வாகன விபத்து சம்பவம் தொடர்பில் தனக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன் றில் வழக்கு விசாரணை நடைபெற்று வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

வழக்கை விசாரிக்கும் நீதிபதி பக்கச் சார்பான முறையில் நடந்து கொண்ட தால், வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவு பிறப்பிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாரர் கோரியிருந்தார்.

ஆனால், நீண்ட நேரம் உண்மைகளை பரிசீலித்து தனது முடிவை அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயம், மனு வை நிராகரித்து உத்தரவிட்டது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 30

புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள பயங் கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வர்த்த மானியில் வெளியிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச் சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதனை குறிப்பிட்டார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்த சட்டமூலத்தில் ஒருசில பிரிவுகள் தொடர்பாக பலர் கவலைகளை எழுப்பி யிருந்தனர்.

இந்நிலையில் அனைவரின் கருத்து களையும் கருத்திற்கொண்டு தேவையான திருத்தங்களைச் செய்ய தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அதற்கமைய, திருத்தங்களை உள் வாங்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை மீண்டும் தயாரிக்க சட்டவரை ஞருக்கு ஆலோசனை வழங்க அமைச் சரவை தீர்மானித்துள்ளது.

இதேநேரம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக சட்ட மூலத்தைத் தயாரிப்பதற்கும் அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்த மானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப் பிப்பதற்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யோசனை முன்வைத்துள்ளார்.

# வீஸா முறையை இலகுபடுத்த அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு, ஓக. 30

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் களத்தினால் தற்போது நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள விஸா முறைமையை இலகுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இலங் கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வருகை வீஸா, வதிவிட வீஸா மற்றும் போக்குவரத்து வீஸா என மூன்று வகையான வீஸாக்களை வழங்குகிறது.

வருகை வீஸா மற்றும் வதிவிட வீஸா ஆகிய இரண்டு வகையான வீஸாக்களின் கீழ் வழங்கப்படும் வீஸா வகைகளில் தற்போதுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அதிக வெளிநாட்டு ஈர்ப்பு உள்ள நாடுகளில் செயல்படுத்தப்படும் விஸா முறைகளை கணக்கில் எடுத்துக் கொள்வதாக அரசாங்கம் கூறுகிறது.

இதனால் விஸாமுறையை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, தற்போது நடைமுறையில் உள்ள விஸா முறையை எளிமையாக்கும் வகையில் பொது பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# 15 வயது சிறுமிக்கு குழந்தை பிரசவம் சம்பவத்தை மறைத்தாரா மருத்துவர்?

கொழும்பு, ஓக. 30

சிறுமி ஒருவர் குழந்தையைப் பெற்றெ டுத்த சம்பவத்தை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தெரிவிக்காமல் மறைப்பதற்கு கராப்பிட்டி வைத்தியசா லையின் விசேட சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் செயல்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தையை பெற்றெடுத்த 15 வயது டைய சிறுமி பண்டாரகம பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

சிறுமி 14 வயதில் கர்ப்பமாக இருந்ததால் அவர் பிரசவித்த குழந்தை குறைந்த எடையுடையதாக இருந்ததால் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக இந்தச் சிறுமி அறுவைச் சிகிச்சை நிபுண ரால் கராப்பிட்டிய வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவுக்கு அனுப்பி வைப்ப தற்கு பரிந்துரை செய்யப்பட்டார்.

அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இந்தச் சிறுமிமீது ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில், மருத்துவ மனை ஊழியர்கள் இது தொடர்பில் வைத்தியசாலை சட்ட மருத்துவப் பிரிவுக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த மருத்துவர், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அவ்வாறான அறிவித்தலை வழங்கக் கூடாது என அச்சுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையின் சட்ட வைத்திய பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள் ளதாக கராப்பிட்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சுப்பர் நீல...

பிரகாசமும் மாதத்துக்கு மாதம் மாறுபடும். இன்றைய முழுமதி பூமியை 50 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் நெருங்கி வருகின்றது. ஒரே மாதத்தில் இரு நிலவு கள் தோன்றும்போது இரண்டாவது முழுநிலவு நீல நிலவு என அழைக்கப் படுகிறது. ஆனால், இது உண்மையில் நீல நிறத்தில் தோன்றுவதில்லை.

கிழக்கு வானத்தில் சூரியன் மறைந்த பிறகு இன்று மாலை முதல் முழுநிலவை மேற்கு வானில் காண முடியும். எனினும், சுப்பர் நீல நிலவை காண சிறந்த நேரம் சூரிய உதயத்துக்கு - அதாவது நாளை வியாழக்கிழமை அதிகாலையாகும். இந்த நாட்களில் எதிர்நிலையில் இருக் கும் பிரகாசமான சனிக் கிரகம் சந்திர னுக்கு மிக அருகாகத் தெரியும். இந்த வாய்ப்பை தவறவிட்டால் அடுத்த சுப்பர் நீல நிலவுக்காக 2037 ஜனவரி மற்றும் மார்ச் வரை காத்திருக்க வேண்டும் என் றும் அவர் கூறினார். (ஐ)

## ராஜகுமாரியின்...

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருட்டு குற்றச்சாட்டில் வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பிரபல தொலைக்காட்சி தயாரிப்பாளரும் வர்த்தக பிரமுகருமான பெண்மணி வீட்டில் பணிபுரியும் 42 வயதான ஆர். ராஜகுமாரி கொழும்பு தேசிய வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். (அ)

## குழந்தையின்..

இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து மானிப்பாய் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஜெனிவாவுக்கு இம்முறை உயர்மட்ட குழு செல்லாது!

## முடிவு செய்தது இலங்கை அரசு

கொழும்பு, ஓக. 30

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் பேரவைக்கு உயர்மட்டக் குழுவை அனுப்பி, மனித உரிமைகள் பேரவையுடன் முட்டி மோதலில் ஈடுபடுவதில்லையென்ற முடிவுக்கு இலங்கை வந்துள்ளது.**

**வரவிருக்கும் கூட்டத் தொடரில் இலங்கை குறைந்த அணுகுமுறையைக் கொண்டிருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.**

பெரும் பொருட் செலவில் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு ஆளணியை அனுப்பியும், இலங்கை தொடர்பான பிரேரணைகளை தோற்கடிக்க முடியாது என்ற கசப்பான யதார்த்தத்தின் பின்னணியிலேயே அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது.

மனித உரிமைகள் பேரவை கடந்த ஆண்டு இலங்கை தொடர்பான 51ஃ1 தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆணையாலர் அலுவலகம் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடலை அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானம் கோருகிறது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் மற்றும் அதன் 53ஆவது மற்றும் 55ஆவது அமர்வுகளில் மனித உரிமைகள் பேரவைக்கு வாய்மொழியாக ஒரு புதுப்பிப்பை வழங்குவது,

மற்றும் அதன் 54ஆவது அமர்வில் எழுதப்பட்ட புதுப்பிப்பு மற்றும் அதன் 57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை பற்றி இம்முறை உரையாடலின் பின்னணியில் விவாதிக்கப்படும்.

அரசாங்கம் இம்முறை எந்தவொரு உயர்மட்ட தூதுக் குழுவையும் மனித உரிமைகள் பேரவைக்கு பரப்புரைக்கு அனுப்பாது என அறிய முடிகிறது. அந்தந்த நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியின் கைகளில் அதை விட்டுவிடுகிறது. எவ்வளவு பிரயத்தனப்பட்டும், ஐ.நா அமைப்பின் எந்தவொரு தீர்மானத்தையும் தோற்கடிப்பதற்கு தேவையான எண்ணிக்கையைப் பெற முடியாது என்ற யதார்த்தத்திற்கு அரசாங்கம் வந்துள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் பிரச்னைகளை ஆராய, தற்போதுள்ள பொருத்தமான ஒரேயொரு வழியான- வெளிநாட்டின் தலையீட்டைக் கோரும் தீர்மானத்தை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்துள்ளது.

அடுத்த அமர்வு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தொடங்கி ஒக்ரோபர் 13 ஆம் திகதி வரை தொடரும். இலங்கை விவகாரம் செப்ரெம்பர் 11 ஆம் திகதி விவாதிக்கப்படும். (அ)

# கிளிநொச்சியில் விபத்தில் சிக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

கிளிநொச்சி, ஓக. 30

விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி முறிகண்டிக்கும், இரணைமடு சந்திக்கும் இடையில் ஏ-9 வீதியில் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கிளிநொச்சியிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பார ஊர்தியுடன் சமாந்தரமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க முற்பட்ட மாட்டுக்கு இடம் கொடுத்துச் செல்ல முற்பட்டவேளை இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பலனின்றி அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செனவிரட்ன என தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு ஆதரவு!

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 30

இலங்கையின் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் எண்டர் பிரேன்ச் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த உலகில் சுமார் 20 நாடுகளில் விரைவாக மீண்டு, இயல்பு நிலைக்கு வந்த இலங்கையை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாக ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் எண்டர் பிரேன்ச் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஊழல் எதிர்ப்புச் சட்டம், மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை, இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்கச் செயல்முறை தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்துகொண்டு தயாரிக்கப்பட்டது என்றும் குறித்த சட்டமூலம் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய தடையாக இருந்து வரும் ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஊழல் எதிர்ப்புச் சட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை பெற்றுக்கொண்டதாகவும அமைச்சர் கூறினார்.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட சட்டம் எனச் சட்டத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக கடந்த 10 மாதங்களுக்குள் 30க்கும் மேற்பட்ட புதிய சட்ட மறுசீரமைப்புகளை அனுமதித்துக்கொண்டதாகவும் நீதி அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

யுத்தத்துக்கு பின்னர் இனங்களுக்கிடையில் ஒத்துழைப்புகளை முன்னேற்றுவதற்காக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை முறைகள் தொடர்பாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் இதன்போது கேட்டறிந்தார். (அ)

# கடும் வறட்சியினால் 291,804 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 30

நாட்டில் நிலவும் வறட்சியினால் 18 மாவட்டங்களில் 84 ஆயிரத்து 681 குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 91 ஆயிரத்து 804 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ, வடமேல், தென், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வடக்கு மாகாணத்தில் 23 ஆயிரத்து 688 குடும்பங்களை சேர்ந்த 75 ஆயிரத்து 607 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 991 குடும்பங்களை சேர்ந்த 63 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த மாகாணத்தில் ஓடைகள், ஆறுகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

மத்திய மாகாணத்தில்,9 ஆயிரத்து 697 குடும்பங்களை சேர்ந்த 32 ஆயிரத்து 695 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களை சேர்ந்த 62 ஆயிரத்து 253 குடும்பங்களை சேர்ந்த 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அஸ்வெசும குறித்து விவரங்கள் பெற 1924 இற்கு அழையுங்கள்!

02 மில்லியன் பயனாளிகளில், 1.5 மில்லியன் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணிகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், முதற்கட்டமாக 689,803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் 4.395 பில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கூறினார்.

இதேநேரம் ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அஸ்வெசும குறித்த அனைத்து விவரங்களையும் 1924 என்ற துரித தொலைபேசி எண் மூலம், வார நாட்களில் காலை 9 மணி முதல் 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

# நல்லூரில் பொலித்தீன் பை வைத்திருந்த கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 30

நல்லூர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினரால் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 08 மாத காலப் பகுதியில், தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நல்லூர் மகோற்சவ காலங்களில் ஆலய சூழலில், கச்சான் கடைகள், இனிப்பு கடைகள், காரம் சுண்டல் கடைகள் என பெருமளவான தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அக்கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பாவனைகள் அதிகளவில் காணப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சோதனை நடவடிக்கையில் இறங்கிய மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள், பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதோடு இனிவரும் நாட்களிலும் இவ்வாறு செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தினர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



### ஆசிய கிண்ண தொடர்

# இந்திய அணியில் ராகுல் விலகினார்




புதுடில்லி, ஒக. 30

காயத்திலிருந்து முழுமையாக குணமடையாததால் ஆசிய கிண்ணத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இருந்து இந்திய அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான கே. எல். ராகுல் விலகியுள்ளார்.

ஆசியக் கிண்ணத் தொடர் இன்று தொடங்குகிறது. காயம் காரணமாக நீண்ட நாட்கள் அணியில் இடம் பெறாமல் இருந்த கே. எல். ராகுல் ஆசியக் கிண்ணத் துக்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில், காயத்திலிருந்து முழுமையாக குணமடை யாததால் ஆசியக் கிண்ணத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இருந்து கே. எல். ராகுல் விலகியுள்ளார். (ஐ)

# இலங்கை அணியிலிருந்து மதுஷங்கவும் விலகினார்

கொழுமபு, ஒக. 30

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் தில்ஷான் மதுஷங்க காயத்தால் ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

ஆசிய கிண்ணத் தொடர் இன்று தொடங்குகிறது. இலங்கை மற்றும் பாகிஸ்தானில் இந்தத் தொடர் நடக்கிறது.

இந்த நிலையில், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் தில்ஷான் மதுஷங்க இலங்கை அணியின் காயமடைந்தவர்கள் பட்டியலில் இணைந்துள்ளது அணிக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அணியில் காயம் காரணமாக லகிரு குமாரா, துஷ்மந்தா சமீரா, வனிந்து ஹசரங்க போன்ற வர்கள் விலகியுள்ளனர். இந்த வரிசையில் தில்ஷன் மதுஷங்கவும் இணைந்துள்ளார். (ஐ)




# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சக்காரி அதிர்ச்சி தோல்வி!



நியூயோர்க், ஒக. 30

அமெரிக்காவில் திங்கட்கிழமை தொடங்கிய ஆண் டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓப்பனில் முன்னணி வீராங்கனையான கிரீஸின் மரியா சக்காரி முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில், போட்டித்தரவரிசையில் 8ஆம் இடத்திலிருந்த அவர் 4-6, 4-6 என நேர் செற்களில் ஸ்பெயினின் ரெபெக்கா மசரோவாவிடம் வீழ்ந்தார்.

இதர ஆட்டங்களில், போட்டித்தரவரிசையில் 15-ஆவது இடத்திலிருக்கும் சுவிற்ஸர்லாந்தின் பெலிண்டா பென்சிச் 6-2, 6-4 என ரஷ்யாவின் கமிலா ரகிமோவாவை வென்றார்.

18-ஆவது இடத்திலிருக்கும் பெலாரஸின் விக்ரோரியா அஸரென்கா 6-1, 6-2 என பிரான்ஸின் ஃபியோனா ஃபெரோவை எளிதாக தோற்கடித்தார். (ஐ)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்; ஜொகோவிச் வெற்றி!



நியூயோர்க், ஒக. 30

நியூயோர்க்கில் நேற்று நடைபெற்ற போட்டியில் விளையாடிய நோவக் ஜொகோவிச் 6-0, 6-2, 6-3 என்ற செற் கணக்கில் அலெக்ஸாண்ட்ரே முல்லரை வீழ்த்தினார்.

கடந்த ஆண்டு ஜொகோவிச் கோவிட் 19க்கு எதிராக தடுப்பூசி போடாததால், அமெரிக்கா செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் தொடரைத் தவறவிட்டார். 2021 இறுதிப் போட்டியில் டேனியல் மெத்வதேவிடம் வீழ்ந்த பின் அவரது முதல் போட்டி இதுவாகும்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி அவர் மீண்டும் நம்பர் 1 தரவரிசையைப் பெறுவேன் என்று உறுதியளித்தார். தரவரிசையில் இது அவரது 390ஆவது வாரமாக இருக்கும். (ஐ)

# ஒரே ஓவரில் 100 மீற்றர் கடந்த பொலார்ட்டின் மூன்று சிக்ஸர்கள்



ஜமைக்கா, ஒக. 30

கரீபியன் பிறீமியர் லீக்கின் (சி. பி. எல்) 12ஆவது போட்டியில் டி. கே. ஆர். (ட்ரின்பாகோ நைற் ரைடர்ஸ்) அணிக்கு எஸ். கே. என். பி. (சென். கிட்ஸ் அண்ட் பாட்ரியாட்ஸ்) அணி 20 ஓவர்களுக்கு 179 ஓட்டங் களை இலக்காக நிர்ணயித்து. இதில் அதிகபட்சமாக ருதர்போர்ட் 62 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து ஆடிய டி. கே. ஆர். அணி 17.1 ஓவர்களுக்கு 180 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதில் நிகோலஸ் பூரண் அதிகபட்ச
சமாக 961 ஓட்டங்களும் டுக்கர் 36 ஓட்டங்களும் பொலார்ட் 37 ஓட்டங்களும் ரஸல் 8 பந்துகளில் 23 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு வித்திட்டனர்.

எஸ். கே. என். பி. அணியின் நவீத் வீசிய 15ஆவது ஓவரில் அணித் தலைவர் பொலார்ட் 4 சிக்ஸர்கள் அடித்து அசத்தினார். இதில் முதல் சிக்ஸர் ஓவரின் 2ஆவது பந்துக்க வந்தது. அடுத்து 4, 5, 6ஆவது பந்துகளில் தொடர்ந்து மூன்று சிக்ஸர்கள் அடித்தார் பொலார்ட். இதில் முதல் 3 சிக்ஸர்களும் (101,107,102) 100 மீற்றர்களுக்கு அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. கடைசி சிக்ஸர் மட்டும் 95 மீற்றரில் விழுந்தது. (ஐ)

# இலங்கையின் தடை நீக்கம்

கொழும்பு, ஒக. 30

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு விதித்த தடையை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் நீக்கியுள் ளது.

இது தொடர்பான கடிதத்தை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் விதிக்கப் பட்டிருந்த தடையை நீக்குவது தொடர்பில் இலங்கை அதிகாரிகளுக்கு சில வழிகாட்டுதல்கள் வழங்கப்பட் டிருந்தன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகம் தொடர்பாக கடந்த ஜூலை 24ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டதாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் இலங்கை உதைபந்தாட்ட சம்மேள னத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்காலத்தில் இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிட்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அங்கத்துவத்தை கடந்த ஜனவரி 21ஆம் திகதி முதல் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் இடைநிறுத்தியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வில்லியம்சனுக்கு அவகாசம்!



வெலிங்டன், ஒக. 30

இந்தியாவில் ஒக்ரோபர் மாதம் நடைபெறும் உலகக் கிண்ண போட்டியில் விளையாடுவதற்கு உடல் தகுதியை நிரூபிக்க கேன் வில்லியம்சனுக்கு இரண்டு வார காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதாக தலைமை பயிற்றுநர் கேரி ஸ்டெட் திங்களன்று தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ. பி. எல்.) குஜராத் ரைட்டன்ஸ் அணிக்காக விளையாடும் போது அவரின் வலது முழங்காலில் தசைநார்கள் கிழிந்தன. 33 வயதான அவர் நன்றாக குணமடைந்து வலைப் பயிற்சி பெற்று வருகிறார் என்பது குறிப்பி டத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# பிரிகோஜின்: புடின் நண்பராக உச்சம் தொட்டவர் எதிரியான இரண்டே மாதங்களில் மரணம் - எப்படி?

ஆண்ட்ரெய் கோரியனோவ்

ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் மற்றும் வாக்னர் குழுமத்தின் தலைவர் எவ்கேனி பிரிகோஜினுக்கு இடையிலான நட்பு சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் தொடங்கியது. அதேபோன்ற தெளிவற்ற மற்றும் விரும்பத்தகாத வழியில் அது முடிவுக்கும் வந்தது.

அரசு பாதுகாப்பு ஏஜென்ஸிகள், தலைமறைவு உலகத்தின் குற்றவாளிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்த காலப் பகுதியில் உருவான, ஒருவரை ஒருவர் சார்ந்த உறவு இது. அதன் முடிவு மோசமாகவே இருக்கும் என்பது கண்கூடு.

வாக்னர் குழுமம் சில தசாப்தங்களுக்குள் ரஷ்யாவின் மிகவும் செல்வாக்கு மிக்க அமைப்பாக மாறியது. புடின் அரசு தொடர்வது, உக்ரேன் போரில் பிரிகோஜினின் வெற்றியை சார்ந்ததாக ஆகிவிட்டதாக மேலும் சிலர் கருதினர்.

இப்போது அரசியல் செல்வாக்கிற்கான எல்லா போட்டிகளையும் முடிவுக்கு கொண்டுவர கிரெம்ளின் விரும்புகிறது என்றே தோன்றுகிறது.

1990களின் முற்பகுதியில் எவ்கேனி பிரிகோஜின் முதல் முறையாக விளாதிமிர் புடினை சந்தித்தார். அவர்களின் முதல் சந்திப்புக்கான சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் பிரிகோஜின் சிறையில் இருந்து அப்போதுதான் விடுவிக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகிறது. மறுபுறம் சோவியத் பாதுகாப்பு சேவையான கேஜிபிக்காக கிழக்கு ஜெர்மனியில் ஒரு பணியை முடித்துவிட்டு புடின் திரும்பி வந்திருந்தார். அரசியலில் நுழைய அவர் வழியை தேடிக் கொண்டிருந்தார்.

சோவியத் யூனியன் பல நாடுகளாகப்பிரிந்த நேரத்தில், தலைமறைவு குற்றவாளிகளின் ஆதிக்கம் மேலோங்கியது. அவர்களின் கைகளுக்கு நிறைய அதிகாரம் கிடைத்தது.

வரலாற்று ரீதியாக சோவியத் யூனியனில் பாதுகாப்பு சேவைகள், குற்றவாளிகளின் உதவியை பெற்றன. பேச்சு வார்த்தை நடத்தி, பல்வேறு பணிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தன.

குற்றவாளிகள் இந்த வகையான ஆதரவால் பயனடைவார்கள். இதனால் அவர்களும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

எவ்கேனி பிரிகோஜினும், விளாதிமிர் புடினும், ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமும், பெரும்பாலான மக்களின் கலாச்சார தலைநகருமான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை சேர்ந்தவர்கள். இங்கே ஹெர்மிடேஜ் கலை அருங்காட்சியகம் மற்றும் இம்பீரியல் குளிர்கால அரண்மனை உள்ளது.

இந்த நகரம் "ரஷ்யாவின் குற்ற தலைநகரம்" என்றும் அழைக்கப்படுகிறது, அங்கு சிறிய திருடர்கள் முதல் பெரிய குற்றமுதலைகள் வரை பல சக்திவாய்ந்த கிரிமினல் கும்பல்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

### வாக்னர் குழுமத்தின் தலைவர்

எவ்கேனி பிரிகோஜின் இதற்கு விதிவிலக்கல்ல. 1970களில் அவர் திருட்டு வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் எச்சரிக்கையைப் பெற்றார்.

1981 ஆம் ஆண்டில் அவர் மீண்டும் பிடிபட்டார். அவர் மீதான கொள்ளை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த கொடூரமான குற்றச் சம்பவத்தின் சூழ்நிலைகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன: பிரிகோஜினும் மற்ற இரண்டு கூட்டாளிகளும் தெருவில் ஒரு பெண்ணைத் தாக்கி, கழுத்தை நெரிக்க முயன்றனர். இதைத் தொடர்ந்து அவர்கள் அந்த பெண்ணின் குளிர்கால காலணிகள் மற்றும் காதணிகளுடன் தப்பிச் சென்றனர்.

எதிர்காலத்தில் வாக்னர் குழுமத்தின் தலைவராக வரவிருக்கும் பிரிகோஜின் 1990 இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் வெளியே வந்தபோது இருந்த உலகம் அவர் சிறைக்குச் சென்றபோது இருந்ததிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

சீர்திருத்தவாதி மிக்கேல் கோர்பச்சேவ், பழைய சோவியத் தலைவர் லியோனிட் ப்ரெஷ்நேவின் இடத்திற்கு வந்திருந்தார். பெரிஸ்ட்ரோய் சீர்திருத்தம் முழு வீச்சில் இருந்தது. பெர்லின் சுவர் இடிக்கப்பட்டிருந்தது.

### புடின் மற்றும் அமெரிக்கா

1990 களின் நடுப்பகுதியில் எவ்கேனி பிரிகோஜின், செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 'தி ஓல்ட் கஸ்டம் ஹவுஸ்" என்ற உணவகத்தைத் திறந்தார். குற்ற கும்பல்களின் தலைவர்கள் மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் மேயர் அனடோலி சோப்சாக் ஆகியோரும் இங்கு அடிக்கடி வந்து செல்வார்கள்.

அந்த நேரத்தில் புடினுக்கு 40 வயது. அவர் சோப்சாக்கின் உதவியாளராக பணியாற்றினார்.

ஆனால் பிரிகோஜினுக்கு வாழ்க்கைப் பாதை மிகவும் கடினமாக இருந்தது. அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உணவகங்களின் சங்கிலியைத் தொடங்கினார். அங்கு வெளிநாட்டு வாடிக்கையாளர்களைத் தவிர, அரசியல் வாதிகளும் வருவார்கள்.

2002 இல் பிரிகோஜின், விளாதிமிர் புடினுக்கும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்க்கும் இரவு உணவு பரிமாறுவது போன்ற ஒரு புகைப்படம் உள்ளது. அந்த நேரத்தில் அவரது செல்லப்பெயர் "புடினின் சமையல்காரர்".



கேஜிபியில் பணியாற்றியவரும், சந்தேக புத்தி கொண்டவருமான புடின் போன்ற ஒருவருக்கு தனது உணவின் பாதுகாப்பை உறுதிசெய்ய சொந்த சமையல்காரர் இருப்பது இன்றியமையாததாக இருந்தது.

2000 களின் முற்பகுதியில், விளாதிமிர் புடின் கிரெம்ளின் சென்றடைந்தார். ரஷ்யாவின் பாதுகாப்பு சேவை, தனது கட்டுப்பாட்டை மீண்டும் பெறத் தொடங்கியது.

2000 களின் நடுப்பகுதியில் இருந்து எவ்கேனி பிரிகோஜின், கிரெம்ளினுக்காக பல்வேறு பணிகளை செய்யத் தொடங்கினார். குறிப்பாக பாதுகாப்பு சேவைகளின் அதிகார எல்லைக்கு வெளியே உள்ள பணிகள் இதில் அடங்கும்.

ரஷ்யாவிலும் வெளிநாட்டிலும் தவறான தகவல்களை பரப்புவதையே முக்கிய பணியாகக்கொண்ட ஊடக நிறுவனத்தை அவர் நிறுவினார்.

இந்த ஊடக இயந்திரத்தில் உருவாக்கப்பட்ட கதைகள், எந்த ஒரு அரசு பிரச்சார அமைப்பும் பரப்பத்துணியாத அளவிற்கு அத்தனை சிறப்பாக இருந்தன.

ஆனால் சமூக ஊடகங்களின் சகாப்தம் வந்து அதன் செல்வாக்கு அதிகரித்தபோது, பிரிகோஜின் தனது சொந்த 'ட்ரோல் தொழிற்சாலையை" நிறுவினார்.

### ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள்

உண்மை என்று எதுவும் இல்லை, அதைப் பின்தொடர்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்ற நம்பிக்கையை ரஷ்யர்களிடையே பரப்ப இந்த தொழிற்சாலை உதவியது என்று பல வர்ணனையாளர்கள் கருதுகின்றனர்.

2013-14 ஆம் ஆண்டில், உக்ரேனிய புரட்சி மற்றும் க்ரைமியா ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட பிறகு, தனியார் ராணுவ அமைப்பான "வாக்னர் குழுமம்" முதல் முறையாக வெளிச்சத்திற்கு வந்தது.

வாக்னர் குழுமம், க்ரைமியா மற்றும் கிழக்கு உக்ரேனில், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளை ஆதரித்தது.

அந்த நேரத்தில் கிரெம்ளினுக்கு உக்ரேனை முழுமையாக ஆக்கிரமிக்கும் தைரியம் இல்லை. மாறாக அது சிரியாவில் ஒரு ராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.

சிரியாவில் ரஷ்யாவின் தலையீட்டின் நோக்கம், கிழக்கு உக்ரேனில் உள்ள டான்பாஸில் நடந்த போரில் இருந்து கவனத்தை திசை திருப்புவதாகும் என்று பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த நேரத்தில்தான் பிரிகோஜினின் நெருங்கிய கூட்டாளியான டிமித்ரி உத்திகன் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். அவர் வாக்னர் குழுமத்தின் கமாண்டர் ஆனார். அவர் தீவிர வலதுசாரி கருத்துக்கள், மிருகத்தனம் மற்றும் இரக்கமற்ற குணத்திற்கு பெயர் பெற்றவர்.

### தனியார் ராணுவம்

எவ்கேனி பிரிகோஜினும், அவரது தனிப்பட்ட ராணுவமும் புடினின் அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது. ஆனால் பிரிகோஜினுடன் அரசுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று ரஷ்ய அரசு 2022 வசந்த காலம் வரை தொடர்ந்து கூறி வந்தது. தனியார் ராணுவத்தை வைத்திருப்பது ரஷ்ய சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. வாக்னரின் செயல்பாடுகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கிரெம்ளினின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தொடர்ந்து கூறிவந்தார். சில தனியார் தொழிலதிபர்கள் இதில் ஈடுபட்டிருக்கலாம் என்பது மட்டுமே கிரெம்ளினுக்குத் தெரியும் என்று அவர் கூறிவந்தார்.

ஆனால் மறுபுறம் வாக்னர் ரகசியமாக ஈடுபட்டிருந்த உக்ரேன் மற்றும் சிரியாவின் ராணுவ நடவடிக்கைகள், ரஷ்யாவின் உயர் அதிகாரிகளின் ஒப்புதல் இல்லாமல் நடந்திருக்க முடியாது என்பதும் அனைவருக்கும் தெளிவாகத் தெரிந்தது.

2022 கோடையில், செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்து ஆயுதமேந்திய தொழிலதிபர்கள் குழு உக்ரேனில் போரில் ஈடுபட்டதாக ரஷ்ய ஊடகங்களில் செய்திகள் வெளிவரத் தொடங்கின.

சில வாரங்களுக்குள் எவ்கேனி பிரிகோஜின், ரஷ்ய சிறைகளுக்குச் சென்று போரிடுவதற்காக கைதிகளை ஆட்சேர்ப்பு செய்யத் தொடங்கினார்.

2022 இலையுதிர்காலத்தில், அதிகாரப்பூர்வ கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ். "நடப்பதை பார்த்து அவரது இதயம் வலிக்கிறது" மற்றும் "பெரிய பங்களிப்பை வழங்குபவர்" என்று பிரிகோஜின் பற்றி விவரித்தார்.

2022 நவம்பரில் எவ்கேனி பிரிகோஜின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 'வாக்னர் மையத்தை" திறந்தார், அதே நேரத்தில் ரஷ்ய ராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் மீதான அவரது விமர்சனம் கூர்மையாக ஆனது.

தெற்கு உக்ரேன் மற்றும் கிழக்கின் சில பகுதிகளில் இருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கியபோது, பாதுகாப்பு அமைச்சகத்தின் மீதான பிரிகோஜினின் விமர்சனம் உச்சத்தை எட்டியது. போரில் தனியார் ராணுவத்தின் பங்களிப்பை ஒப்புக்கொள்ள ராணுவ தளபதி மறுப்பதாக வாக்னர் குழமத்தின் தலைவர் புகார் கூறினார்.

கிழக்கு உக்ரேனில் உள்ள பாக்மூத் நகரில் நடந்த சண்டையின் போது வாக்னருக்கு போதுமான வெடிமருந்துகளை வழங்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு மற்றும் சீஃப் ஆஃப் ஜெனரல் ஸ்டாஃப் வலேரி ஜெராசிமோவ் மீது அவர் குற்றம் சாட்டினார். அதிகரித்து வந்த மோதல் குறித்து கிரெம்ளின் பகிரங்கமாக கருத்து தெரிவிக்கவில்லை.

ஆனால் எல்லா தனியார் ராணுவ குழுக்களும் ஒரு கமாண்டின் கீழ் வர வேண்டும் மற்றும் ராணுவத்துடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டும் என்று ஜூன் மாதத் தொடக்கத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கோரியது. பிரிகோஜின் இதை திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ரஷ்யப் படைகள் வாக்னரின் நிலைகளை குறிவைத்ததாக, ஜூன் 23 ஆம் தேதி அதிகாலையில் எவ்கேனி பிரிகோஜின் குற்றம் சாட்டியபோது மோதல் உச்சத்தை எட்டியது. இருப்பினும் அத்தகைய தாக்குதல் நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை.

### பிரிகோஜினின் அச்சம்

மாஸ்கோவை நோக்கி 'நீதியின் அணிவகுப்பு" நடத்தப்படும் என்று பிரிகோஜின் அறிவித்தார்.

இவை பிரிகோஜினின் விரக்தியின் அறிகுறிகள் என்றும் ரஷ்ய ராணுவத்திற்கு எதிரான தனது மோதல் குறித்து அதிபர் புடினின் கவனத்தை ஈர்க்கும் முயற்சி என்றும் பிபிசி மற்றும் பிற ஊடகங்கள் பேசிய வட்டாரங்கள் தெரிவித்தன.

"தனது சுயஉரிமை பறிக்கப்படுவதைப் பற்றி அவர் கவலைப்பட்டார்" என்று எவ்கேனி பிரிகோஜினை நன்கு அறிந்த ஒருவர் பிபிசியிடம் கூறினார். வாக்னர் குழுமம் இரண்டு ராணுவ ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு விமானத்தை சுட்டு வீழ்த்தியது. சுமார் 15 ரஷ்ய வீரர்களைக் கொன்றது. பிரிகோஜின் இந்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ரஷ்ய பாதுகாப்பு சேவை FSB அவருக்கு எதிராக ஒரு கிரிமினல் வழக்கை ஆரம்பித்தது. அதே நேரத்தில் அதிபர் புடின், பிரிகோஜினின் பெயரைக்குறிப்பிடாமல் அவரை "தேச துரோகி" என்றும் "நாட்டை முதுகில் குத்தியவர்" என்றும் அழைத்தார். மேலும் எல்லா கிளர்ச்சியாளர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் அறிவித்தார்.

### ரஷ்யாவிடமிருந்து நிதி உதவி

ஜூன் 24 ஆம் தேதி மாலை வாக்னர் குழுமத்தின் அணிவகுப்பை எவ்கேனி பிரிகோஜின் நிறுத்தியபோது நிலைமை திடீரென தணிந்தது.

ஜூன் 29 ஆம் தேதி அதிபர் புடின், பிரிகோஜின் மற்றும் பிற கமாண்டர்களை சந்தித்தார். ரஷ்ய ராணுவ தளபதியின் கீழ் பணியாற்ற வாக்னர் குழுவை தான் சம்மதிக்க வைத்திருப்பதாக அதிபர் கூறினார். பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் பணியாற்ற ஒப்புக்கொண்டதை பிரிகோஜின் மறுத்தார்.

வாக்னர் குழுமம் ஆரம்பத்தில் இருந்தே ரஷ்ய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுவந்ததாக அதன்பிறகு விளாதிமிர் புடின் திடீரென்று அறிவித்தார். இருப்பினும் தனியார் ராணுவத்துடன் எந்தவிதமான தொடர்பையும் பல ஆண்டுகளாக கிரெம்ளின் மறுத்து வந்தது.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடந்த ரஷ்யா-ஆப்பிரிக்கா உச்சி மாநாட்டில் பிரிகோஜின் காணப்பட்டார் என்று ஜூலை பிற்பகுதியில் வெளியான சில தகவல்கள் தெரிவித்தன.

### இறுதி பொது உரை

பல ஆப்பிரிக்க நாடுகளில் வாக்னர் குழு செயல்பாடுகளின் வரலாற்றை கருத்தில் கொண்ட பல வல்லுநர்கள், ஆப்பிரிக்க கண்டத்திலும் பிரிகோஜின் தனது கவனத்தைச்செலுத்துவார் என்று கருதினர். டுவெர் பகுதியில் நிகழ்ந்த விமான விபத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் எடுக்கப்பட்ட அவரது வீடியோ ஆன்லைனில் வெளிவந்தது.

பிரிகோஜின் தொப்பி அணிந்து மைதானத்தில் நின்றபடி 'ஐ.எஸ்.ஐ.எஸ், அல்கய்தா மற்றும் பிற கொள்ளையர்களின் இதயங்களில் கடவுள் பயத்தை ஏற்படுத்திய பிறகு நான் இங்கே இருக்கிறேன்" என்று கூறுவதை இந்த வீடியோ காட்டுகிறது.

இதுவே அவரது கடைசி பொது உரை என்று நம்பப்படுகிறது.

பிரிகோஜினின் கதை ரஷ்ய வரலாற்றில் நன்கு அறியப்பட்ட மற்ற எடுத்துக்காட்டுகளுடன் பொருந்துகிறது. கிரெம்ளினின் மிகக் கொடூரமான கொள்கைகளை அமல்படுத்தியவர்கள் பின்னர் தண்டிக்கப்பட்டு, அழிக்கப்பட்டனர் என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

# தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் நல்லிணக்க செயன்முறையை தாமதப்படுத்திவிடக்கூடாது



கலாநிதி ஜெகான் பெரேரா

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு வருடத்துக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்

தோற்றுவிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளும் நம்பிக்கையும் தற்போது பின்னடைவைக் காண்பதாக தோன்றுவது ஏமாற்றத்தை தருகிறது. ஜனாதிபதியாக தெரிவானதும் குறுகிய நாட்களில் தேசிய நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்போவதற்கான அறிகுறிகளை விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

மாகாணசபைகளை நிறுவிய 13 வது திருத்தம் நாட்டின் அரசியலமைப்பின் ஒரு அங்கமாக இருப்பதாகவும் அதை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடிய பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணப்போவதாகவும் அவர் சூளுரைத்தார். 6 மாதங்களுக்கும் அதிகமான காலம் கடந்தும் கூட அது விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை.

மாறாக, உயர்மட்டத்தில் இருந்து மாற்றங்களைச் செய்வதில் ஜனாதிபதிக்கு இருக்கும் வல்லமையில் நம்பிக்கை தொடர்ந்து அதிகரித்துவருகின்ற போதிலும், மாகாணசபைகளின் தேவை குறித்து செல்வாக்கு மிக்க குரல்கள் கேள்வியெழுப்புகின்ற ஒரு நிலை தோன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணும் முயற்சிகள் நேர்மாறாகிக்கொண்டிருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி உறுதிமொழிகளை அள்ளிவீசிய விதம் அவர் தான் செயற்பட வேண்டியிருக்கும் சூழ்நிலையில் அரசியல் ரீதியில் மிகவும் தந்திரோபாயமாக செயற்படுகின்றார் என்று ஊகிக்கவைத்தது. பாராளுமன்றம் அவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்தமை சட்டரீதியானதாகவும் அரசியலமைப்பிற்கு இசைவானதாகவும் இருந்தபோதிலும் நியாயப்பாட்டை இழந்ததாகவே தோன்றியது.

அதனால் அவர் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கவேண்டிய தேவை எழுந்தது. அந்த நேரத்தில் நாடு பிழைத்திருப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவி அவசியமானதாக இருந்தது. போராட்ட இயக்கத்தை புதிய ஜனாதிபதி அடக்கியொடுக்கிய முறை குறித்து மற்றும்படி கடுமையாக கண்டித்திருக்கக்கூடிய சிவில் சமூகக் குழுக்கள் அவற்றின் விமர்சனங்களில் தணிவைக் காட்டின.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பது மற்றும் இனப்பிரச்னை போன்ற முக்கிய பிரச்சினைகளை கையாளுவதற்கான அதன் திட்டங்களை முன்வைப்பதில் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தின் இயலாமை அல்லது தயக்கம் புயலில் சிக்கியிருக்கும் நாடு என்ற கப்பலுக்கு மிகவும் பொருத்தமான மாலுமி ஜனாதிபதி விக்கிரமசிங்கவே என்ற எண்ணத்தை தொடர்ந்து வலுப்படுத்திக் கொண்டே வருகிறது.

நல்லிணக்கச் செயன்முறை தொடர்பில் இறுதியாக ஜனாதிபதி முன்வைத்திருக்கும் யோசனைகள் உடனடியான அல்லது குறுகிய கால பயன்களைத் தரும் என்ற நம்பிக்கையை தருவதாக இல்லை. பதிலாக அந்த யோசனைகள் நடுத்தர காலம் தொடக்கம் நீண்டகாலம் வரையான நோக்கில் கவனம் குவிப்பவையாகவே இருக்கின்றன. இது அடுத்த தேர்தலுக்கு பிறகு தனது திட்டங்களை செயற்படுத்துவதை ஜனாதிபதி மனதிற்கொண்டுள்ளார் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி வாசித்த 13 வது திருத்தம் தொடர்பிலான விரிவான நிலைப்பாட்டு அறிக்கை சுருக்கமான ஒரு சட்டவிளக்கமாக அமைந்தது. அந்த சிக்கல்களை கருத்தில் எடுப்பதாக இருந்தால் அவற்றைக் கட்டவிழ்த்து தமிழ்க்கட்சிகளுடன் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு குறைந்தது ஒரு வருடம் அல்லது அதற்கும் கூடுதலான காலம் எடுக்கும்.

சமூகங்களுக்கிடையில் அதிகாரப்பகிர்வு தொடர்பிலான ஒரு அரசியல் செயற்திட்டமாக 13 வது திருத்தத்தை மறுசீரமைப்பது என்பது வெறுமனே பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் சாதிக்கக்கூடிய ஒன்று அல்ல. அதற்கு மிகவும் சிரமம் நிறைந்த பேச்சுவார்த்தைகள் அவசியம். அவற்றுக்கு இரு தரப்புகளினதும் நல்லெண்ணம் அவசியம்.

### ஜனநாயகத் தோல்வி

பாராளுமன்றத்தில் ஒரு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வது ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஒரு கஷ்டமான காரியமாக இருந்ததில்லை. ஜனாதிபதி அவசியம் என்ற கருதிய எந்தவொரு சட்டமூலத்தையும் நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் அதன் பெரும்பான்மை ஆதரவை அரசாங்கம் கொடுத்தே வந்திருக்கிறது. வரியிறுப்பாளர்கள் மீது பாரிய சுமையை ஏற்றிய வரி மறுசீரமைப்பு சட்டமும் இவற்றில் அடங்கும்.

ஆனால், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் மூலமாக சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் வலலமை, மறுசீரமைப்புக்கு சிறுபான்மை இனம் இணங்காத பட்சத்தில் இனப்பிரச்னையுடன் தொடர்புடைய விவகாரங்களில் ஒரு தீர்வாக இருக்கப்போவதில்லை. உத்தேச சட்டமூலம் சிறுபான்மை இனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையானால், பிரச்னை தீர்க்கப்படாமல் தொடரவே செய்யும்.

இதே காரணத்தை, சர்வதேச சமூகம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிடமிருந்து வருகின்ற நெருக்குதல்களுக்கான பதிலாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கும் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கும் பொருந்தும்.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கம் வரைந்திருக்கும் விரிவான சட்டமூலம் அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்படுகின்ற ஒன்றாக நோக்கப்படுமானால், அதற்கு



எந்த பெறுமதியும் இருக்கப்போவதில்லை. அந்த ஆணைக் குழுவை அமைப்பதற்கான சட்டமூலம் சிறுபான்மையின் கட்சிகளின் இணக்கத்துடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே பெறுமதியுடையதாக இருக்கும்.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளின் இணக்கம் தேவை. ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலத்துக்கோ அல்லது நிரந்தரமான பொறிமுறையொன்றை அமைப்பதற்கு முன்னதாக ஒரு வருடகாலத்துக்கு அந்த விவகாரங்களைக் கையாளும் என்று எதிர்பார்க்கப்படும் இடைக்காலச் செயலகத்துக்கோ தமிழ்,முஸ்லிம் கட்சிகள் அவற்றின் இணக்கத்தை தெரிவித்ததற்கான எந்த அறிகுறியும் தற்போது இல்லை.

13 வது திருத்தம் மற்றும் உண்மை ஆணைக்குழு தொடர்பிலான அரசாங்கத்தின் அணுகுமுறையை நோக்கும்போது இனப்பிரச்சினையைக் கையாளுவதற்கான அதன் திட்டத்தை எதிர்காலத்துக்கானதாக குறைந்தபட்சம் தேர்தல்களுக்கு பிறகு ஒரு வருடகாலத்தில் கவனிப்பதற்கான ஒன்றாக கருதிச் செயற்படுகின்றது என்றே எண்ண வேண்டியிருக்கிறது. தனது வெற்றிக்கும் இருப்புக்குமான சிறந்த வாய்ப்பாக அரசாங்கம் கருதுகின்றதாகத் தோன்றுகின்ற ஜனாதிபதி தேர்தலுக்கானதே இந்த காலவரையறை.

இதன் காரணத்தினால்தான் ஜனாதிபதி நாட்டின் வடக்கு,கிழக்கிற்கு விஜயங்களை மேற்கொண்டு பாரிய அபிவிருத்தி திட்டங்கள் போன்ற சர்ச்சையில்லாத விடயங்கள் குறித்து விபரங்களைக் கூறி வாக்குறுதிகளை வழங்குகிறார். மன்னாரில் இந்தியவுடனான ரயில் இணைப்பு, கிழக்கில் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இதற்கு மாறாக நல்லிணக்கச் செயன்முறையை குறிப்பாக 13 வது திருத்தம் மற்றும் உண்மை ஆணைக்குழு வடிவில் முன்னெடுப்பது அவை குறித்து எச்சரிக்கையாக இருக்கிறவர்கள் அல்லது அவற்றை எதிர்க்கிறவர்கள் மத்தியில் ஆதரவை அரசாங்கம் இழக்கவேண்டிய நிலையை தோற்றுவிக்கலாம்.

### அரசியல் முதிர்ச்சி அவசியம்

13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் உடனடியாகவே பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் உள்ள தேசியவாத சக்திகளின் எதிர்ப்புக்குள்ளானது. ஆதிகாரப்பரவலாக்கம் இன அடிப்படையில் நாட்டைப் பிரிவினைக்கு உள்ளாக்கும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்று 1950 களில் இருந்து முன்வைக்கப்பட்டுவந்த வாதங்கள் மீண்டும் தற்போது மேலெழுகின்றன.

பெருமளவுக்கு விளம்பரப்படுத்தப்படாத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் ஒப்பீட்டளவில் பொதுமக்கள் மத்தியில் இருந்து எதிர்மறையான பிரதிபலிப்பு வெளிக்காட்டப்ப டவில்லை. பெரும்பான்மையான மக்கள் மத்தியில் இவை தொடர்பில் போதிய அறிவு இல்லாதமை இதற்கு காரணமாக இருக்கலாம்.

இந்த பொறிமுறைகளை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு மக்கள் மத்தியில் அரசாங்கம் பிரசாரங்களை முன்னெடுக்கும்போது சர்ர்ச்சை மூளக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அது இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பது தொடர்பிலான அரசாங்கத்தின் திட்டங்களை பாதிக்கலாம்.

இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய விவகாரங்கள் அரசியல் சமுதாயத்தில் இருக்கும் தேசியவாத சிந்தனைகொண்ட பிரிவினரால் மீண்டும் களறப்படுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இந்த தேசியவாத சக்திகள் பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு பெரிய பின்னவைவைக் கண்டிருந்தன. அதிகாரத்தில் இருந்து ஊழல் முறைகேடுகளைச் செய்தவர்களுடன் இந்த தேசியவாத சக்திகளுக்கு இருந்த தொடர்பை போராட்ட இயக்கத்தவர்கள் அம்பலப்படுத்தினர்.

பாரிய சர்ச்சை மூளக்கூடிய இடமாக வடமாகாணத்தில் உள்ள குருந்திமலை வணக்கத்தலம் விளங்குகிறது. இந்த தலத்துக்கு இந்துக்களும் பௌத்தர்களும் போட்டி போட்டு உரிமை கோருகிறார்கள்.

இரு மதங்களையும் சார்ந்தவர்களுக்கு இடையில் மோதல்கள் மூளும் சாத்தியமும் இருந்தது. வேறுபட்ட இனங்கள் மற்றும் மதங்களுக்கிடயில் பயமும் அவநம்பிக்கையும் இருப்பதாக நாடு பூராவும் செய்தி அனுப்பப்படக்கூடிய ஆபத்தும் இருந்தது.

இனரீதியான பீதியும் துருவமயமும் தேர்தல்களின் போது உச்சபட்சத்துக்கு பயன்படுத்தப்படுவது பாரம்பரியமாக இருந்துவருகிறது. மற்றைய சமூகங்கள் பற்றி தங்கள் சமூகத்தின் மத்தியில் பீதியைக் கிளப்புவதைத் தவிர ஆதரவைப் பெறுவதற்கு அரசியல்வாதிகளுக்கு வேறு உருப்படியான மார்க்கமும் இருப்பதாக தெரியவில்லை.இது ஒரு சமூகத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் சகல சமூகங்களக்கும் பொதுவானதாக உள்ளது.

இலங்கையில் இதுகாலவரையில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய மிகவும் தீவிரமான தேசியவாத அரசாங்கம் அதன் உள்ளக குறைபாடுகள் குறிப்பாக தவறான பொருளாதார முகாமைத்துவம் மற்றும் ஊழல் காரணமாக வீழ்ச்சியடைந்ததை நாம் கண்டோம். அதிர்ஷ்டவசமாக,தேசியவாத அரசியல்வாதிகள் அபகீர்த்திக்குள்ளாக்கப்பட்டதன் விளைவாக இன ரீதியான வன்செயல்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை.

நாட்டை பாதிக்கின்ற பெருவாரியான பிரச்னைகள் பொருளாதாரம் மற்றும் தேர்தல்கள் மீது கவனத்தைச் செலுத்துகின்ற அதேவேளை இனப்பிரச்சினை மற்றும் நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விவகாரங்களையும் கையாளுவதைச் சாத்தியமாக்குகின்றன. இதைச் செய்ய வேண்டியது அவசியம். அல்லது இன்னொரு வருடம் வீணாக இழக்கப்படும்.

சரியானதைச் செய்வதற்கும் ஒரு நேர்மையான எண்ணத்துடன் நடந்துகொள்வதற்கும் இதுவே தருணமாகும். இதை காலந்தாழ்த்த முடியாது. தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு மாத்திரமல்ல தேசிய நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும்போது சிங்கப்பூரிலும் தென்னாபிரிக்காவிலும் தலைவர்களிடம் காணப்பட்ட அரசியல் முதிர்ச்சி வெளிக்காட்டப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

# மலையக தமிழ் மக்களுக்கு இழப்பீட்டுடன் கூடிய நீதியை தாமதிக்கக்கூடாது

இலங்கையில் மலையக தமிழ் மக்களின் 200 வது வருட நிறைவை முன்னிட்டு கடந்த மாதம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரிட்டிஷ் காலினித்துவ ஆட்சியாளர்களினால் ஆரம்பத்தில் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் மலையகத்தை அடைவதற்கு நடந்துவந்த இடர்மிகுந்த பாதையின் தடத்தில் தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை இடம்பெற்ற நடைபவனி இதில் அடையாளபூர்வ முக்கியத்துவத்தைக் கொண்ட நிகழ்வாக அமைந்தது.

இலங்கையின் குடிமக்களாக பன்முக சமுதாயம் ஒன்றின் இன்றியமையாத பிரிவினராக சமத்துவ உரிமைகளுடன் மலையக மக்களுக்கு உரிய அந்தஸ்துக்கு அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த நிகழ்வுகளில் தேசிய சமாதானப் பேரவையும் அதைப்போன்ற சிந்தனையுடைய சிவில் சமூக அமைப்புக்களும் கலந்துகொண்டன.

இலங்கை காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம்பெற்ற பிறகு 1948 ஆம் ஆண்டில் புதிய சுதந்திர அரசாங்கத்தினால் குடியுரிமை பறிக்கப்பட்ட நாள் முதல் இந்த சமூகம் அனுபவித்துவந்த இடர்பாடுகளுக்காக அதற்கு இழப்பீடு வழங்கப்படவேண்ட வேண்டிய விசேட தேவையொன்று இருப்பதாக தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்துவருகின்ற மலையக தமிழ்ச் சமூகம் நாடு சுநந்திரம் பெற்றது முதலாக அவர்கள் மீது அநியாயமாக திணிக்கப்பட்ட வசதியீனங்கள் மற்றும் இடர்பாடுகளினால் தொடர்ந்தும் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்.

இன்றும் கூட மிகவும் மோசமான சூழ்நிலைகளில் அவர்கள் வாழ்கிறார்கள். மிகவும் குறைவான வேதனமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது.இலங்கையின் வேறு எந்த சமூகத்தையும் விட மோசமான வறுமையில் அவர்கள் உழல்கிறார்கள்.

இந்த சமூகம் புவியியல் ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தனிமைப்படுத்தலை அல்ல ஏனைய சமூகங்களுடன் ஒன்றிணைக்கப்படுவதையே விரும்புகிறது.

தங்களது அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளையும் கௌரவத்தையும் பொறுத்தரை ஏனைய சமூகங்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

களுடன் சமத்துவமானவர்களாக நடத்தப்படவேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். இந்த சமத்துவத்தை உறுதிப்படுத்தவேண்டிய அவசியத்தை குறிப்பாக அரசு நிராகரிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி பாடுபட்டு உழைத்து அவர்களும் அவர்களது மூதாதையர்களும் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இரு நூற்றாண்டுகளாக இந்நாட்டில் வாழ்ந்துவரும் அவர்கள் ஏனைய சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக - சுதந்திர குடிமக்களாக தங்களுக்கு வேண்டிநிற்கும் அடையாளத்துக்கு உரித்துடையவர்களே.

தோட்டத் தொழிலாளர்களின் வேதன மட்டங்களை உயர்த்துவதற்கு முன்னுரிமை கொடுத்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்கிறது. இதற்கு தேயிலை வளரும் ஏனைய நாடுகளில் உள்ளதைப் போன்று நவீன முறையில் பெருந்தோட்டத்துறை மறுசீரமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தோட்டப்பகுதிகளில் உள்ள மக்கள் தங்களது காணிகளை வாங்கி வீடுகளையும் சொந்தமாக்கிக்கொள்ள அனுமதிக்க வேண்டியதும் அவசியமாகும். தோட்டப்பகுதியில் அண்மையில் வீடொன்று உடைக்கப்பட்ட அருவருக்கத்தக்க சம்பவம் முழு நாட்டினதும் கவனத்தைப் பெற்றது. நீதி உணர்வுடன் இதற்கு பரிகாரம் காணப்படவேண்டும். இழப்பீடும் வழங்கப்படவேண்டும்.

பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் தங்கள் வீடுகளை அமைத்துக்கொள்ள ஏழு பேர்ச்சஸ் காணி வழங்குவதற்கு 2016 ஆம் ஆண்டில் அரசாங்கம் அறிவித்த கொள்கை உறுதிமொழி தாமதமின்றி நடைமுறைப் படுத்தப்படவேண்டும். அரசுக்கு சொந்தமான சகல பெருந்தோட்டங்களிலும் அது நடைமுறைக்கு வரவேண்டும்.



லயன் வீடுகளில் வாழும் அவல நிலையில் இருந்து தோட்டத் தொழிலாளர்களை படிப்படியாக விடுவிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசாங்க வீடுகளில் பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக வசித்துவருபவர்களுக்கு அத்தகைய வீடுகளை சொந்தமாக கைமாற்றுவதற்கும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர் குடும்பத்துக்கும் தெளிவான உறுதிப்பத்திரத்துடன் ஏழு பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கும் 2017 பட்ஜெட்டில் முன்மொழிவு செய்யப்பட்டது.

இந்த நாட்டின் ஏனைய தொழிலாளர்கள் நீதியைப் பெற நீதிமன்றங்களுக்கு செல்வதற்கும் வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொண்டிருக்கும் வசதிகள் தோட்டத்தொழிலாளர் சமூகத்துக்கும் கிடைப்பதை உறுதிசெய்ய மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் அமைச்சு அல்லது தொழிலாளர் நலன்களை கவனிக்கும் பொருத்தமான அமைப்பக்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கேட்டுக் கொள்கிறது.

